Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 22 (02.04.2005) சனிக்கிழமை இதழ்:185

## பாப்பரசரின் உடல்நிலை கவலைக்கிடம்!



(வத்திக்கான்)

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல்நிலை மோசமடைந்திருப்பதாக வத்திக்கான் நகர செய்தித் தொடர்பாளர் ஜாக்குயின் நவாரோ வோல்ஸ் தெரிவித்தார்.

பாப்பரசரின் சிறுநீரகத்தில் கிருமி படர்ந்துள்ளதால் காய்ச்சல் உருவாகி (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் – சிங்கள புத்தாண்டுக்கு முன் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்து!

## ஜனாதிபதி திட்டமிட்டிருப்பதாக 'ராவய' தகவல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறப்போவதாக ஜே.வி.பி. விடுத்துள்ள எச்சரிக்கையை கவனத்தில் கொள்ளாமல் – எதிர்வரும் தமிழ் – சிங்கள புதுவருடத்துக்கு முன்னர், விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி கைச்சாத்திடத் தீர்மானித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் 'ராவய' சிங்களப் பத்திரிகை தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது –

சுனாமி இடர் முகாமைத்துவம் தொடர்பாக அரசினதும் விடுதலைப் புலிகளதும் ஒத்துழைப்புடன் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஆலோசனைகளை இருதரப்புக்கும் நோர்வே சமர்ப்பித்திருந்தது. இந்த ஆலோசனைகளுக்கு விடுதலைப் புலிகள் உடன்பாட்டைத் தெரிவித்திருந்தாலும் அதனுள் இணைக்கப்பட்டிருந்த ஒரு விடயம் குறித்து அரசாங்கத் தரப்பு திருத்தத்தைச் சமர்ப்பித்துள்ளது.

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் – வியன்னாவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு வினரைச் சந்தித்து பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக தற்போது (12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியர்களுக்கு 2500 ரூபா சம்பள உயர்வு!

### இந்த மாதம் முதல் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

அனைத்து கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கும் 2500 ரூபா விசேட சம்பளக் கொடுப்பனவை வழங்குமாறு வடக்கு – கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போன்று 2500 ரூபாவை 2005 ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

31.12.2000 ஆம் திகதிய 58 ஆம் இலக்க சுற்றறிக்கையில் சம்பளத்துக்கு மேலதிகமாகவே இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அத்துடன் இவற்றுக்கு மேலதிகமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத்தை இம்மாத இறுதியில் கலைப்பது குறித்து சந்திரிகா ஆராய்வு!

## ஜே.வி.பி. போடும் முட்டுக்கட்டைகளே காரணம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள், பொதுக்கட்டமைப்பு உடன்பாடு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை ஆகியவற்றை மறுசீரமைப்பது போன்ற விவகாரங்களுக்கு ஜே.வி.பி. தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் –

இந்த மாத இறுதியில் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா ஆராய்ந்துவருவதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த ஜே.வி.பி. – தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைப்பதற்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இதுபோன்றே பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை ஆகியவற்றை மறுசீரமைக்கும் விவகாரத்திலும் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை ஜே.வி.பி. வெளிப்படுத்தி வருகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)


## மனித உரிமைக்குழு தலைவரை தமிழ்ச்செல்வன் சந்தித்து பேச்சு!

(ஹெல்கிங்சி)

பின்லாந்து நாடாளுமன்ற உறுப்பினரும் சர்வதேச மனித உரிமைக் குழுவின் தலைவருமான உல்லா அனிற்றில்லாவை – தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பின்லாந்து வெளியுறவு அமைச்சகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தச் சந்திப்பு பின்லாந்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத் தமிழரின் இன்னல் நிலையை அறிய ஐ.நா. விசேட குழுவை அனுப்ப வேண்டும்!

## மனித உரிமை கூட்டத்தொடரில் கோரிக்கை

(ஹெல்கிங்சி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்கள், சொல்லொணாத் துயரங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றபோதும் – இலங்கை அரசு அதனைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. அவர்களின் நிலையை நேரடியாகக் காணச் சென்ற ஐ.நா. செயலாளர் நாயகத்தையும் தமிழர் பகுதிகளுக்கு அரசு அனுமதிக்கவில்லை.

ஆகவே, ஐக்கிய நாடுகள் சபை தனது விசேட குழுவை இலங்கைக்கு அனுப்பி – அங்கு ஈழத் தமிழர் படும் துயரை அறிந்து – அதற்கு நிவாரணமளிக்க வேண்டும் என ஜெனீவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் 61 ஆவது கூட்டத்தொடரில், சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்கம் சார்பில் உரையாற்றிய டீயேற்றி மக்கோனால் கோரிக்கை விடுத்தார்.

அவர் அங்கு உரையில் மேலும் கூறுகையில்,

இலங்கைத் தீவில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்மக்களுடைய அடிப்படை உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்டு வருகின்றது. 1948 ஆம் ஆண்டு தொடக்கம் மொழி, கல்வி, நிலம், பிரஜாவுரிமை போன்ற பல விடயங்கள் சட்ட ரீதியாகவே மறுக்கப்பட்டுள்ளன.

நீதி, சமத்துவத்திற்கான தமிழ் மக்களுடைய சாத்வீகப் போராட்டங்களை 1956 ஆம் ஆண்டு முதல் அரச வன்முறையினால் பல இனக்கலவரங்கள் மூலம் அடக்க முற்பட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இப்படியான அரச வன்முறைகள் இறுதியில் தமிழ்மக்களை ஆயுதப்போராட்டத்துக்கு இட்டுச்சென்றன.

கடந்த இருபது வருடகால யுத்தத்தால் 79,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், காணாமற்போயுமுள்ளனர். ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியும் உள்ளனர். 2375 இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களும், இந்துக்கோயில்களும் இலங்கைத்தீவின் தமிழர்களின் தாயக பூமியான வடக்கு – கிழக்கில் விமா னக் குண்டுவீச்சினாலும், செல் தாக்குதல்களா லும் அழிக்கப்பட்டுள்ளன.

கொலையும், பாலியல் வன்முறையும் படைகளினால் ஆயுதமாகப் பாவிக்கப்பட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பல விதங்களில் கொடூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூரச் செயல்களைக் கண்டித்து பல மனித உரிமை அமைப்புகள் குரல் கொடுத்த போதும் அரச படைகள் மன்னிப்புடன் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படாது தொடர்ந்தும் கொடூரப் படையாகச் செயற்படுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# பதவியுயர்வு வழங்குவதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

மாகாண சேவையின் சிற்றூழியர்களை மாகாண பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு 11 'ஆ' பிரிவிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி வாய்ந்த ஊழியர்களின் விண்ணப்பங்களை இம்மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளார்.

எனவே, விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களின் இரு பிரதிகளை தயாரித்து எதிர்வரும் செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் வலையக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஊழியர்களின் பணிப்பாளர் பா. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

## விடுமுறை நாட்களிலும் வர்த்தக நிலையங்களைத் திறக்கலாம்

தமிழ்ப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங்களையும் இன்று தொடக்கம் 14ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

யாழ். மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களுக்குமான விசேட கலந்துரையாடல், வலி - தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் செவ்வாய்க் கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது.

உள்ளூராட்சி உதவியாளர்களது பதவி உறுதிப்படுத்தல், சேவை பிரமான குறிப்பு, வேதன அளவுத்திட்டம், கடமைப்பட்டியல், நிர்வாகப்பொறுப்பு என்பன சம்பந்தமாக விரிவான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 4 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதால் சகல உள்ளூராட்சி உதவியாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

## கூட்டம்

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தில் கல்வி கற்றுவெளியேறிய பட்டதாரி மாணவர்களை ஒன்றிணைத்து பீடமுன் கற்றோர் அவையை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு விவசாய பீட பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பீடத்தில் முன்னர் கல்வி கற்ற 12 அணியினரையும் ஒன்றிணைத்து பீடமுன் கற்றோரை உருவாக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

---

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமும், அரசியல் விவகார தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சும் ஒன்றிணைந்து நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்ட பிராந்திய கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் தேசிய கருத்திட்டக் கூட்டிணைப்பாளர் விவேகா சிறிவர்ந்தன சில்வா, அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரம சில்வா ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். (29)

---

தென்மராட்சியை சேர்ந்த படப்பிடிப்பாளர்களுடனான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம், தீவகம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த படப்பிடிப்பாளர்களுக்கான கூட்டம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட ஒளிக்கலை ஒன்றிய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## மணி விழா

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரத்தின் (நந்தி) இலக்கிய பணியை நினைவு கூர்ந்து நந்தியின் இலக்கிய வாழ்வின் மணிவிழா என்ற தலைப்பிலான கௌரவ நிகழ்வு நாளை காலை 4மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நந்தியின் சிறந்த "சிறுகதைகள் 12" என்ற நூல் வெளியிடப்படும்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
சரத்குமார் நமீதா வடிவேலு நடித்த
குளிரூட்டப்பட்டது
ஏய்
விரைவில் குருதேவா
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

ராஜா யாழ்ப்பாணம்
இன்று முதல் சில தினங்களுக்கு மட்டும்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக், நாசர், நடித்த
தமிழன் (சி-3980)
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்

மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர், அஸ்வின் மற்றும் பலர் நடித்த
(சிறந்த குடும்ப காவியம்)
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், திரிஷா நடித்த
கில்லி (சி-3976)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
சில தினங்கள் மட்டும்
சூர்யா, ஜோதிகா நடித்த மாயாவி
3 முதல் அஜித்தின்.. ஜீ
கா.நே. 11.00, 3.00, 7.00, 10.00

# சைவநெறித் தேர்வு நாளை பரிசளிப்பு விழா

யாழ். சைவபரிபாலன சபை நடத்திய சைவநெறி தேர்வில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலனசபைத் தலைவர் சைவப் புலவர் வ. கந்தசாமி தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சைவநெறித் தேர்வில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார்.

இந்த நிகழ்வில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி சிவகஜனி சிறிக்குமார் 'சைவ ஒழுக்கம்' என்ற தலைப்பிலும், குமரேசன் பாலசண்முகன் 'வாழ்க்கையில் திருமுறைகள்' என்ற தலைப்பிலும் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் செ. கந்தசத்தியதாசன் 'சைவத்தின் பெருமை' என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

# சிறுவர் பாதுகாப்பு நிலையங்களை பதிவு செய்வதற்கு நீதிபதி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாது இயங்கும் சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள், தங்குமிடங்களுக்கு பொறுப்பானவர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு தேவையான ஆவணங்களுடன் எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றிற்கு சமுகமளிக்குமாறு யாழ். மேலதிக நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பல சிறுவர் இல்லங்களும், தங்குமிடங்களும் இருக்கின்ற போதும் அவை பதிவு செய்யப்படவில்லை என மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினர் தெரிவித்ததை அடுத்தே நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 56 சிறுவர் பாதுகாப்பு நிலையங்களும், 16 சிறுவர் தங்குமிடங்களும் இருக்கின்ற போதும் இவற்றில் 9 மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிவு செய்யப்படாத சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள், தங்குமிடங்களில் என்ன நடக்கின்றது என அறிய முடியவில்லை. எனவே, யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து சிறுவர் பாதுகாப்பு நிலையங்கள், தங்குமிடங்களின் தலைவர்களை உரிய ஆவணத்துடன் வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# தேசிய அபிவிருத்தியில் தமிழர் கல்வி
## நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தேசிய அபிவிருத்தியில் தமிழர் கல்வி - நூல் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி நிர்வாக உப பீடாதிபதி ஆர். சக்தியேந்திரம்பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் சபா. ஜெயராசா, கல்வியற்துறைத் தலைவர் மா. சின்னத்தம்பி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு. மோகனதாஸ் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

நூலின் முதல் பிரதியை யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் பெற்றுக்கொள்வார்.

# 1ஆம் ஆண்டு நினைவலைகள்



கடவுளை நாங்கள் காணவில்லை
நீங்களே கண்கண்ட தெய்வம்!
நீத்தல் வாழ்வின் முடிவு அல்ல
புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்
உங்களுடைய நினைவுகளில்
நாங்கள் வாழ்வதால்
இந்த உலகம் உள்ள வரை
உங்கள் வாழ்வு தொடரும்
கடவுள் உலகில் வாழச் சென்று
இன்றுடன் ஓராண்டு நிறைவு.
அங்கும் அமைதி வாழ்வு வாழும் -எம்
கடவுளையும் நாம் கண்டு விட்டோம்.
துதிப்போம்! துதிப்போம்! துதிப்போம்!

தோற்றம் 16.03.1947

மறைவு 16.03.2004

அமரர்

## கந்தையா தனபாலசிங்கம்

(மின்மாணிவாசிப்பாளர், இலங்கை மின்சாரசபை, மின் பாவனையாளர் சேவை நிலையம், நகரப் பணிமனை, யாழ்ப்பாணம்)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# இடர்முகாமைத்துவம் குறித்த தேசிய கொள்கை விரைவில்!

இயற்கை இடர் முகாமைத்துவம் குறித்த தேசியக்கொள்கை ஒன்று விரைவில் ஜனாதிபதியால் அறிவிக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தேசியக் கொள்கை இயற்கை இடர் முகாமைத்துவம் குறித்த ஜப்பானின் விசேட நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது. கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரனர்த்தத்தையடுத்து, இது போன்ற தேசியக் கொள்கை தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் கவனத்தில் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா - அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஜப்பான், ஆசிய நாடுகளிடம் கோரிக்கை விடுத்த போதும், ஜப்பான் அரசாங்கமே இது தொடர்பாக உடனடியாக உதவுவதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பல துறைகளுடன் சம்பந்தப்பட்ட 30 பேரடங்கிய குழு வொன்று, கடந்த 16 ஆம் திகதி இலங்கைக்கு வந்து, நாட்டின் பலபகுதிகளுக்கும் பயணம் செய்து, இலங்கைக்குப் பொருத்தமான கொள்கை குறித்து கண்டறிந்துள்ளது. ஜப்பான் சென்ற இந்தக் குழுவினர் தாம் இங்கு செய்த ஆய்வுகளின் அறிக்கையுடன் மீண்டும் இங்கு விரைவில் வரவுள்ளனர்.

இவர்கள் தயாரித்த திட்ட அறிக்கை ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தத்திட்ட அறிக்கை கிடைத்ததும், ஜனாதிபதி சந்திரிகா இலங்கையிலுள்ள நிபுணர்களுடன் இது தொடர்பாகக் கலந்துரையாடலை நடாத்தவுள்ளார். இறுதித் தேசியக்கொள்கை இந்தக் கலந்துரையாடலுக்கு பின்னரேயே எடுக்கப்படும். (தே)

# சுனாமி எச்சரிக்கையின்போது ரயில்களைப் பாதுகாக்கத்திட்டம்

(கொழும்பு)

சுனாமி தொடர்பான எச்சரிக்கைகளின் போது, மக்களினதும், ரயில் வண்டிகளினதும் பாதுகாப்புக்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டவுடன், பயணம் செய்துகொண்டிருக்கும் சகல ரயில்களையும் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரயில் பாதைகளில் பாதுகாப்பான இடங்கள் கண்டறியப்பட்டு, அதுகுறித்து ரயில்வே கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவிக்குமாறு போக்குவரத்து அமைச்சர் பீலிக் பெரேரா ரயில்வே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சுனாமி அனர்த்தம் தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் பின்னர், இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இது குறித்து அறிவித்துள்ளார். சுனாமியால் பெற்ற அனுபவங்களைக் கொண்டு மீண்டும் அவ்வாறான, அனர்த்தத்திலிருந்து விடுபடும் முறைகளைக் கண்டறிய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். இதற்கென ஒரு குழுவும் நியமிக்கப்படவுள்ளது.

அண்மையில் சுனாமி தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டபோது, ரயில்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும், கரையோர ரயில் சேவையை ரத்துச் செய்வதற்கும், ரயில் நிலையங்களை மூடிவிடுவதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

இந்த நடவடிக்கை குறித்து ரயில்வே பொது முகாமையாளர் டி.ஆர்.டி.சில்வாவுக்கு அமைச்சர் பீலிக் பாராட்டைத் தெரிவித்தார். (தே)

# சமாதானம் குறித்த சரியான தகவல்களை ஊடகங்கள் மூலம் அறிவிக்க முடியவில்லை!

## இப்படிச்சொல்கிறார் ஜயந்த தனபால



சமாதான செயற்பாடுகள் குறித்து மக்களுக்குச் சரியான தகவல்கள் ஊடகங்கள் மூலம் வழங்கப்படுவதில்லை. இதனால் எடுக்கவேண்டிய சரியான வழி எது என்பதைத் தீர்மானித்துக் கொள்வதற்கு அரசாங்கத்துக்கு கடினமாக இருப்பதாகவும், அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சுனாமியால் அழிந்துபோன நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு விடுதலைப்புலிகள் மற்றும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக அமைக்கவுள்ள கட்டமைப்பைச் செயற்படுத்தும்போது, புலிகளும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்துக்கு வருவர்.

தேசிய ஊடகங்களின் மூலம் சமாதான செயற்பாடுகள் குறித்த உண்மையான நிலைமை நாட்டு மக்களுக்கு மறைக்கப்படுவது மிகவும் துர்ப்பாக்கிய நிலையாகும். இதனால் சமாதான செயற்பாட்டின் உண்மையான உரிமையாளர்களாகிய நாட்டு மக்களுக்குச் சரியான நிலைமையைத் தெரிந்துகொள்ள நாட்டின் அனைத்து மக்களையும், அமைப்பு ரீதியாக ஏற்படுத்தி, அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாமலுள்ளது.

தடைப்பட்ட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு சுனாமி மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. புலிகளும், படையினரும் இணைந்து மனிதர்களின் உயிர்களைக் காப்பாற்றியும், சொத்தழிவுகள் ஏற்படுவதைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமையை காணக் கூடியதாக இருந்தது.

மிகப் பெரியளவில் வடக்கு - தெற்குக்கிடையே நிவாரணப் பரி மாற்றங்கள் நிகழ்ந்ததையும் காண முடிந்தது. அவற்றின் பிரதிபலனாக ஜனாதிபதி தனது செயலர்மூலம், அழிந்துபோன வடக்கு - கிழக்கை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடு களில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகளின் அரறியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுத்தார்.

சுனாமியால் அழிந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் கிடைக்கும் வெளிநாட்டு உதவிகள் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மேல் மாகாணங்களுக்கிடையே சமமாகப் பகிரப்படுவதையும் உறுதிப்படுத்திக் கொண்டு, மறுசீரமைப்பு நடவடிக்கையை அரசும், விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து, செயற்படுகின்ற கட்டமைப்பைத் தயாரித்து, அதன் மூலம் முக்கியமானவற்றை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைக்குமாயின் அந்த அழைப்பை ஏற்க அவர்கள் உடன்பட்டனர்.

இதுகுறித்து விடுதலைப் புலிகளுடன் கடந்த ஜனவரி 2 ஆம் திகதி தொடக்கம் மூன்று மாதகாலப் பகுதிக்குள் பேச்சுவார்த்தைகள் பல நடந்தன. இந்தக் கட்டமைப்பில் நாட்டின் அனைத்து இனத்தவரும் பிரதிநிதித்துவம் பெறுவர்.

இதேபோன்று கிழக்கின் கடற்கரையோர பிரதேசங்களில், சிறுபான்மையாக உள்ள சிங்கள மற்றும் முஸ்லிம்களின் உரிமைகளும் இதில் பாதுகாக்கப்படும். நடைமுறையில் அரச கட்டமைப்பு நடவடிக்கைகளில் புலிகளை இணைத்துக்கொள்வதற்கு இதன்மூலம் முடியும்.

கடந்தகாலத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்ட புலிகளை சமாதான மேசைக்குக் கொண்டுவந்து, யுத்தத்தால் அழிந்துபோய், உதவிகளை எதிர்பார்த்து துயரப்படுபவர்களுக்கு, ஜனநாயக செயற்பாடுகள் மூலம், வெற்றி கொள்வதற்கு, ஜனநாயக பிரதான அரசியல் நீரோட்டத்தில் ஒன்றிணைக்க முடிந்துள்ளது.

நாட்டுமக்களினதும், பொது அமைப்புகளினதும், பொறுப்பாக உள்ளது, அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவதெனவும் தெரிவித்தார். (தே)

# நிவாரண மோசடி சந்தேகநபர்கள் நீதிமன்றில் பிணைகோரி மனு!

(கொழும்பு)

சுனாமி நிவாரணத்தில் மோசடி செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் அரச அதிகாரியொருவர் உட்பட 5 பேர் முன்பிணைகோரி மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

காத்தான்குடி பிரதேசத்தில் அரச அதிகாரியாகப் பணியாற்றும் அதிகாரியொருவர், சமைத்த உணவு வழங்காமல் சுமார் 6 லட்சம் ரூபாவை உணவு வழங்கியதாகக்கூறி, நிதி மோசடி செய்துள்ளதாக அந்த அதிகாரிக்கு எதிராக பொதுமக்கள் தரப்பிலிருந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு அரசாங்க உணவுக் களஞ்சியத்திலிருந்து காத்தான்குடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட 25 சாக்கு அரிசி மற்றும் 90 கலன் தாவர எண்ணெய் அடங்கிய 15 பெட்டிகள் ஆகியவற்றை பலநோக்கு கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் வீட்டிலிருந்து இரவு நேர தகவலொன்றின் பேரில் பொலிஸார் கைப்பற்றினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் எம்.ஐ. இப்ராகிம், அரசாங்க களஞ்சியப் பொறுப்பாளர் தம்பி மரிக்கார் ரசாக் மற்றும் இவரது நண்பர்களான உமர் லெப்பை, அக்பர் அலி, இமொகமது காசிம், அப்துல் கபீர் ஆகியோர் பொலிஸாரால் விசாரணைக்காகத் தேடப்பட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட நபர்களும் தமக்கு முன்பிணை வழங்குமாறு கோரி, சட்டத்தரணியூடாக தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர்,

இது தொடர்பான அறிக்கையுடன் பிரதிவாதியான காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார்.(01)

## ஊழியர்களின் உரிமையைப் பாதுகாக்க

# மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை

## ஜனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், இலங்கை மின்சாரசபை ஆகியவற்றை மீளக்கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

தாதிமார் பயிற்சிக்கென சேர்த்துக் கொள்ளப்பட்ட 15 ஆயிரம் பேருக்கு நியமக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றவேளை, அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியன எந்தவிதத்திலும் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சாரசபை என்பன அரச வங்கிகளுக்கு சுமார் ஒரு இலட்சம் மில்லியன் ரூபா கடன் பணத்தைச் செலுத்தவேண்டிய நிலையிலுள்ளன.

இந்த நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தாமல், வெளிநாட்டு அல்லது உள்நாட்டு கம்பனிகளுக்கு விற்காமல், பலப்படுத்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது. ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, இந்த இரண்டு நிறுவனங்களையும் முன்னேற்றுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த இரண்டு நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு, மற்றைய நிறுவன ஊழியர்களைவிட கூடுதலான சம்பளமும் வழங்கப்படுகிறது. இந்த நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு



உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன பெருமளவில் கடனுதவிகளை வழங்க முன்வந்துள்ளன. குறைந்த வட்டியுடனான இந்தக் கடனை 40 வருடங்களில் திருப்பிச் செலுத்தமுடியும்.

ஆனால், ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இதனைச் செய்யமுடியாதுள்ளது. இலங்கை மின்சாரசபையைச் சேர்ந்த 14 ஆயிரம் ஊழியர்களுக்காக இந்த நாட்டின்-200 இலட்சம் மக்களைக் காட்டிக் கொடுப்பது நாட்டை நிந்திக்கும் ஒரு செயலென அவர் தெரிவித்தார். (தே)

# படையினரால் கைது செய்யப்படும் எவராவது காணாமற்போனால் அரசே பொறுப்பேற்கவேண்டும்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

படையினாலோ அல்லது பொலிஸாரினாலோ கைது செய்யப்படும் ஒருவர், காணாமற்போனால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும் எனக் கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.

கைது செய்யப்படும் ஒருவர் வாழ்வதற்கான உரிமையை பாதுகாப்பதும், அரசாங்கத்தின் கடமை என்றும், அந்தத் தீர்ப்பில் சுட்டிக்காட்டி, அந்தக் கடமையிலிருந்து அரசாங்கம் நழுவிவிட முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலையில் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போன சகோதரர்கள் இருவர் தொடர்பான வழங்கு விசாரணையின் முடிவில் இந்தத் தீர்ப்பை உயர்நீதிமன்றம் வழங்கியது.

நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க தலைமையிலான நீதியரசர் குழு இந்த வழக்கை விசாரணை செய்தது. 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி திருகோணமலையைச் சேர்ந்த மச்சவல்லவன் ஆறுமுகம் மற்றும் மச்சவல்லவன் மகேந்திரராஜா ஆகியோர் கைது செய்யப்பட்டு, காணாமற்போயினர்.

குறிப்பிட்ட நபர்கள் கைது செய்யப்பட்ட பின்னர், காணாமற்போனதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும் என்பதால், உரிமை கோரும் உறவினருக்கு தலா 3 லட்சம் ரூபாவை நட்டஈடாகச் செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் மற்றொரு உத்தரவையும் பிறப்பித்துள்ளது. (01)

# இசை நிகழ்ச்சி நடத்த ஜாக்ஸன் கொழும்பு வருகிறார்!

(கொழும்பு)

பிரபல பாடகர் மைக்கல் ஜாக்ஸனின் இசைநிகழ்ச்சி கொழும்பில் நடைபெறவுள்ளது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வழக்கொன்றில் குற்றம் சாட்டப்பட்டு, தற்போது அமெரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றில் ஜாக்ஸனுக்கு எதிராக வழக்கு விசாரணை நடைபெற்றுவருகிறது.

இந்த நிலையில் விசேட அனுமதி ஐயைப் பெற்ற ஜாக்ஸன் - கொழும்பு வந்து நிகழ்ச்சி நடத்துவது குறித்து, ஜாக்ஸனின் சட்டத்தரணிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

நிகழ்ச்சித் திகதி குறித்து இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. ஆனால் மூன்று மணிநேர நிகழ்வாக நடைபெறவுள்ள இந்தக் காட்சியில் - ஜாக்ஸனின் பிரபல அல்பங்களான டேஞ்சிரஸ், ஓவ் த வோல், த்ரில்லர், ப்ளக், போன்றவற்றிலிருந்து பாடல்களைப் பாடி ஆடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (01)

# கண்காணிப்புக்குழுவுடன் புலிகள் அம்பாறையில் சந்திப்பு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் மாலை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் அம்பாறை மாவட்டத் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் ரதன் பங்கேற்றார்.

படையினர் நடத்திவரும் சோதனை நடவடிக்கையில் விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென ரதன் இந்தச் சந்திப்பின்போது கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டப் பொறுப்பாளர், படையினரின் சீண்டலுக்கு மத்தியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பொறுமையாக இருக்கின்றனர். மாவட்டத்தில் இடம்பெறும் சம்பவங்களை நிறுத்துவதற்கு உரிய அதிகாரிகளுடன் பேச்சு நடத்த இருக்கின்றேன் என்று அவர் குறிப்பிட்டார். (01)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட்: வலுவானநிலையில் மேற்கிந்தியத் தீவுகள்



(கயானா)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் - மேற்கிந்தியத் தீவுகள் அணி - முதல்நாள் ஆட்டத்தில் 3 விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்களைக் குவித்து வலுவான நிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் கயானாவில் ஆரம்பமான இந்தப் போட்டியில் - நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி - முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது.

ஹின்ட்ஸும் - சிமித்தும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். சிமித் அதிரடியாக ஆட முற்பட, அணியின் ஸ்கோர் 24ஆகஇருந்தபோது நெல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

சிமித் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபின்னர், கங்கா களமிறங்கினார். அவரும் ஓட்டமெதையும் பெறாமலே ஆட்டமிழந்ததையடுத்து பகொன் களமிறங்கினார்.

ஹின்ட்ஸ் - பகொன் ஜோடி அபாரமாக ஆடிக்கொண்டிருந்தது. எனினும் 72 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த பகொன் நெல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் சந்தர்போல் களமிறங்கினார். ஹின்ட்சுடன் இணைந்து இருவரும் அபாரமாக ஆடினர். முதல்நாள் ஆட்டநேரமுடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹின்ட்ஸ் 229 பந்துகளில் 30 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 188 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும் -



சந்தர்போல் 173 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 102 ஓட்டங்களைப் பெற்றநிலையிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மூன்று விக்கெட்டுக்களையும் அன்ட்ரூ நெல் கைப்பற்றினார்.

# மொனாக்கோ செஸ்: ஆனந்த் சம்பியன்!



(மொனாக்கோ)

மொனாக்கோ செஸ் போட்டியில் இந்திய வீரர் ஆனந்த் சம்பியன் பட்டத்தை வென்றார்.

14ஆவது அம்பர் பிளின்ட் போலட் மற்றும் ரேபிட் செஸ் போட்டி மொனாக்கோவில் நடைபெற்றது.

11 சுற்றுகள் கொண்ட இந்தப் போட்டியில் 12 முன்னணி வீரர்கள் பங்கேற்று ஆடினர்.

இதன் 10ஆவது சுற்று ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் இந்திய கிராண்ட் மாஸ்டர் ஆனந்த், ரஷ்ய வீரர் பீட்டர் சிவட்லெரை எதிர்கொண்டார். பிளின்ட் போல்ட் மற்றும் ரேபிட் ஆகிய இரு ஆட்டங்களும் சமநிலையில் முடிந்தன.

10ஆவது சுற்று முடிவில் பிளின்ட் போல்ட் பந்தயத்தில் ஆனந்த் 7.5 புள்ளிகளுடன் முன்னணி வகிக்கிறார். மற்ற வீரர்கள் அவரைவிட, 2 புள்ளிகள் குறைவாக உள்ளனர். இதனால் ஆனந்த் இன்னும் ஒரு சுற்று இருக்கும் நிலையிலேயே சம்பியன் ஆனார்.

ரேபிட் பந்தயத்தில் ஆனந்த் 7 புள்ளிகளுடன் முன்னணி வகிக்கிறார். 6 புள்ளிகள் பெற்ற பீட்டர் லெகோ, அலெக்சாண்டர் 2ஆவது இடத்தில் உள்ளனர். ஆனந்த் இன்னும் மேலதிக புள்ளி பெற்றாலே சம்பியன் ஆகிவிடுவார். ஒட்டுமொத்தப் பிரிவிலும் ஆனந்த் சம்பியனாகுவது உறுதியாகிவிட்டது. அவர் 14.5 புள்ளிகளுடன் முன்னணி வகிக்கிறார். அதற்கு அடுத்தபடியாக பீட்டர் லெகோ, அலெக்சாண்டர் 11.5 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளனர்.

## விளையாட்டு

# ஒருநாள் போட்டித் தொடரின்போது கங்கூலிக்கு பதற்றம் கொடுப்போம்!

## கப்டன் இன்சமாம் சூளுரை




ஒருநாள் போட்டித் தொடரில் இந்திய அணிக்கு நெருக்கடியைக் கொடுக்கப்போவதாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் தெரிவித்தார்.

இரு அணிகளும் இன்று முதல் 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பலப்பரீட்சை நடத்தத் தயார் நிலையில் இருக்கின்றன. இதற்காக இரு அணி வீரர்களும் தற்போது கொச்சியில் முகாமிட்டுள்ளனர்.

இந்தநிலையில், இன்று ஆரம்பமாகவுள்ள ஒருநாள் ஆட்டம் குறித்து பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் நிருபர்களிடம் கூறுகையில்-

நடக்க இருக்கும் ஒருநாள் போட்டியில் இந்திய அணிக்கு நெருக்கடி கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்திய அணி கப்டன் கங்கூலி துடுப்பாட்டத்தில் தடுமாறிக் கொண்டிருக்கிறார். தொடர்ந்து அவருக்கு பதற்றம் கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். இதில் வருத்தப்படுவதற்கு எதுவுமில்லை. இதுபோன்ற மோசமானநிலை அனைத்து வீரர்களுக்கும் ஏற்படுவது உண்டு. இருந்தபோதும் தற்போதுள்ளநிலையில் பாகிஸ்தான் அணி இதைச் சாதகமாக்கிக் கொள்ள முனைப்புடன் உள்ளது என்றார்.

# முதல் ஒருநாள் போட்டிக்காக இன்று இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதல்



(கொச்சி)

இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஆறு ஒருநாள் போட்டிகளைக் கொண்ட கிரிக்கெட் தொடர் இன்று கொச்சியில் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணியைப் பொறுத்தவரையில் வலுவான துடுப்பாட்ட வரிசையைப் பெற்றிருந்தாலும், கடைசி டெஸ்டில் பாகிஸ்தானிடம் தோல்வியடைந்துள்ளதால், ஒருநாள் போட்டியில் சிறப்பாக ஆடி வெற்றி பெறவேண்டிய நிலையில் உள்ளது.

இன்றைய போட்டியில் ராவிட்டே விக்கெட் காப்பாளராகச் செயற்படுவார். டெஸ்டில் பாலாஜி முத்திரை பதித்தார். இதனால் பந்துவீச்சில் பாலாஜி, பதான், நெஹ்ரா அல்லது சகீர்கான் ஆகியோர் களமிறங்குவார்கள். சுழற்பந்தில் ஹர்பஜனுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

டெஸ்ட் தொடரை சமன் செய்ததன்மூலம் பாகிஸ்தான் அணி புதுத் தெம்மைப் பெற்றுள்ளது. அந்த அணி துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் சிறந்து விளங்குகிறது. துடுப்பாட்டத்தில் இன்சமாம், யுனுஸ்கான், யுகானா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

அப்ரிடி டெஸ்டில் அதிரடியாக ஆடி அரைச்சதமடித்தார். சமீப காலங்களில் ஒருநாள் போட்டியில் கடைசியாகக் களமிறங்கிய அவர் இதன்மூலம் தொடக்க வீரராக ஆடுவார். அந்த அணியின் சகலதுறை ஆட்டக்காரரான சொகைப் மலிக் டெஸ்டில் ஆடவில்லை. இதனால் அவர் போட்டியில் இடம்பெறுவார்.

பந்துவீச்சில் சமி, ரசாக், கனேரியா ஆகியோர் சிறப்பாகப் பந்துவீசி வருகின்றனர். கனேரியா பெங்களூர் டெஸ்டில் முத்திரை பதித்தார். மேலும் வேகப்பந்து வீச்சாளர் நவீட்-உல்-ஹசனுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம்.

இந்திய அணிக்கு எல்லாவகையிலும் சவால் விடுக்கும் அணியாக பாகிஸ்தான் திகழ்கிறது. இரு அணியிலும் சிறப்பான துடுப்பாட்டவரிசை உள்ளதால், தொடர் மிக விறுவிறுப்பாகவும், கடும் போட்டி நிறைந்தும் காணப்படும்.

கொச்சி மைதானத்தில் இதுவரை இந்தியா 3 போட்டியில் ஆடியுள்ளது. இதில் அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்க அணிகளுக்கு எதிராக வெற்றி பெற்றுள்ளது. கடைசியாக 2001ஆம் ஆண்டு சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்தது. அந்த ஆட்டத்தில் இந்தியா 191 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இந்திய-பாகிஸ்தான் அணிகளிடையேயான ஒருநாள் போட்டித் தொடர் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

# முதலிடத்துக்கு முன்னேறினார் அவுஸ்ரேலியாவின் மக்ரா!



(புதுடெல்கி)

டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ராகுல் ராவிட் முத லிடத்தில் தொடர்ந்தும் நீடித்து வருகிறார்.

சாம்சங் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான தரவரிசைப் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் பாகிஸ்தானுக்கு எதிரான 3 போட்டிகளில் அபாரமாகச் செயற்பட்ட ராவிட் முதலிடத்தைப் பிடித்தார். இவர் 133 புள்ளிகள் பெற்றுள்ளார். அடுத்த இடத்தில் அவுஸ்ரேலியாவின் அடம் கில்கிறிஸ்ட் (130புள்ளிகள்) உள்ளார். மூன்றாவது இடத்தை ஷேவாக் பெறுகிறார்.

பந்துவீச்சு பட்டியலில், 499 விக்கெட் என்ற மைல்கல்லை எட்டிய அவுஸ்ரேலியா வின் மக்ரா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இவர் 195 புள்ளிகளைப் பெற்றுள்ளார். முதலிடத்தில் இருந்த இந்தியாவின் கும்ளே (162 புள்ளிகள்) இரண்டாம் இடத்துக்கு பின்தங்கியுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் வோன் (160) புள்ளிகள்) மூன்றாமிடம் பெறுகிறார். அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் அவுஸ்ரேலியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இங்கிலாந்து (73புள்ளிகள்), இந்தியா (68 புள்ளிகள்) அணிகள் முறையே இரண்டாம் மூன்றாம் இடத்தில் உள்ளன.

# பாகிஸ்தானுடனான போட்டி சவாலாகவே இருக்கும்!

## ஜோன் ரைட் கூறுகிறார்



(கொச்சி)

பாகிஸ்தான் அணிக்கெதிராக நடக்கவிருக்கும் ஒருநாள் கிரிக்கெட் தொடர், சவாலானது என்று பயிற்சியாளர் ஜோன் ரைட் கூறியுள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக இந்திய அணிக்குப் பயிற்சியாளராக இருக்கும் ஜோன் ரைட்டின் ஒப்பந்த காலம் முடிவடைய இன்னும் ஒருமாத காலம் மட்டுமே மீதமுள்ளது.

எனவே பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடருடன் ஜோன் ரைட்டின் பணிக்காலம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில் நடக்க இருக்கும் ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி அதிக சவால் கொடுக்கும் என்று ஜோன் ரைட் பேட்டியளித்துள்ளார்.

கொச்சியில் அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

பாகிஸ்தான் அணி சமபலத்துடன் இருக்கிறது. எனவே டெஸ்ட் போட்டியைப் போலவே ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி அதிக நெருக்கடி கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.சி.சி.தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி முன்னேற வாய்ப்பு!

ஐ.சி.சி. தரவரிசைப்படி ஒருநாள் போட்டித் தரவரிசையில் எட்டாவது இடத்திலுள்ள இந்திய அணி - பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை வெற்றிகொண்டால், ஐந்தாவது இடத்துக்கு முன்னேற வாய்ப்பிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.சி.சி. ஒருநாள் போட்டிக்கான தரவரிசைப் பட்டியலில் முன்னேற்றம் காண இந்தியாவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதற்கு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றவேண்டும்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டி தரவரிசைப் பட்டியலில் இந்தியா 8ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரை முழுமையாக வென்றால் (6-0) ஐந்தாவது இடத்துக்கு முன்னேறலாம்.

5-1 என்ற முன்னிலையில் கைப்பற்றினால் ஏழாவது இடத்தைப் பெறலாம். தற்போது பாகிஸ்தான் அணி நான்காவது இடத்தில் உள்ளது.

இந்த அணி தொடரை 6-0 என்ற முன்னிலையில் வென்றாலும்கூட முன்னேற்றம் எதுவும் காண இயலாது. ஏனென்றால் மூன்றாவது இடத்தில் உள்ள நியூஸிலாந்து வலுவான (7 புள்ளி அதிகம்) முன்னிலை பெற்றுள்ளது.

ஒருவேளை தொடர் 3-3 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தால், இரு அணிகளின் நிலையிலும் மாற்றமிருக்காது. ஆனால், புள்ளி அடிப்படையில் பாகிஸ்தான் 109இல் இருந்து 108ஆக குறையும்.

இந்தியாவுக்கு இரண்டு புள்ளிகள் கூடுதலாகக் கிடைக்கும். அதாவது 98இல் இருந்து 100 புள்ளிகள் பெறும்.

தற்போது அணிகளின் நிலைகள் வருமாறு -

| | |
|---|---|
| 01. அவுஸ்ரேலியா | 140 |
| 02.இலங்கை | 117 |
| 03.நியூஸிலாந்து | 116 |
| 04.பாகிஸ்தான் | 109 |
| 05.தென்னாபிரிக்கா | 107 |
| 06.மேற்கிந்தியத் தீவுகள் | 105 |
| 07.இங்கிலாந்து | 103 |
| 08.இந்தியா | 98 |
| 09.சிம்பாப்வே | 50 |
| 10.கென்யா | 26 |
| 11.பங்களாதேஷ் | 11 |

# வீனஸை வீழ்த்தியதன் மூலம் இறுதிப் போட்டியில் ஷரபோவா!


(மியாமி)



மியாமியில் நடைபெறும் நஸ்டாக் ஓபன் ரெனிஸ் அரையிறுதிப் போட்டியில், ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா 6-4, 6-3 என்ற செட்களில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தினார். இதன் மூலம் இவர் இறுதிப்போட்டக்குத் தகுதிபெற்றார்.

இதேவேளை ஆண்கள் காலிறுதியில் ஸ்பெயின் நாட்டின் டேவிட் பெரர் 6-2, 6-3 என்ற செட்களில் செக் குடியரசின் டொம்னிக் ஹெர்படியை வென்றார். அரையிறுதியில் அவர் ஸ்பெயின் வீரர் ரபேல் நடேலைச் சந்திப்பார். ரபெல் 6-2, 6-4 என்ற செட்களில் சுவீடன் வீரர் தோமஸ் ஜோகன்சனை வென்றார்.

# பாலு கரடி






சிறுவர் அரங்கம்

# துருவன்



சிந்தனைக்கு
மற்றவர்களை விட உங்களை எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.



## பூனை

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை


வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை

பாலைக் குடிக்கப் பார்க்கும்
பதுங்கி இருக்கும் பரணில்
வாலைப் பற்றி இழுத்தால்
வஞ்சித்து கையைக் கடிக்கும்

நாயைப் பார்த்துச் சீறும்
நகத்தால் மரத்தில் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்.

எலியை ஓடிப் பிடிக்கும்
ஏறி மரத்தில் நடக்கும்
புலியைப் போலே இருக்கும்
புள்ளிக் கோட்டுப் பூனை

உண்ணும் சோறும் பாலும்
ஊட்டி வளர்ந்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை.




சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள்

## ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.



ம.கஜன்
தரம் -02
யாழ்/ கரணவாய் மத்திய வித்தியாலயம்




செ.சாகித்தியா
தரம் - 03
யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலை.



உ.சசிக்குமார்
தரம் -05
யாழ்/ விக்னேஸ்வராக் கல்லூரி.

## உங்கள் கைவண்ணம்



செ.பிறைசில்
தரம் -09
கானான் நவஜீவனம்

## பண்புகளால் உயர்ந்தவர்

| | | |
|---|---|---|
| 1. அரிச்சந்திரன் | - | வாய்மை |
| 2.வீமன் | - | வலிமை |
| 3. பரதன் | - | சகோதரபாசம் |
| 4.வசிட்டர் | - | தவம் |
| 5. ஏகலைவன் | - | குருபக்தி |
| 6.கர்ணன் | - | கொடை |
| 7.கும்பகர்ணன் | - | செஞ்சோற்றுக்கடன் |

ஜெ.ஜெயக்கமலன்
தரம் - 07 , மகாஜனாக் கல்லூரி

## மரம்


மரமே மரமே பூ தருவாய்
பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
கனியே கனியே விதை தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்த்தே வளம்
பெறுவோம்.

நா.இலக்சிகா
தரம் -01
மானிப்பாய் மகளிர் கல்லூரி



# சுறா மீன்

எங்கள் கப்பல் ஆபிரிக்கக் கரையருகே நங்கூரம் பாய்ச்சி நின்றது. பகல் இன்பமாக இருந்தது. கடலிலிருந்து குளுமையான காற்று வீசிற்று. ஆனால் மாலை ஆவதற்குள் பருவநிலை மாறிவிட்டது. புழுக்கமாக இருந்தது. சகாராப் பாலைவனத்திலிருந்து அனல் காற்று கொதிக்கும் அடுப்பிலிருந்து வருவதுபோல எங்கள் மேல் அடித்தது. சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னர் கப்பல் கப்டன் மேல்தட்டுக்கு வந்து 'குளியுங்கள்' என்று கத்தினார். ஒரே நிமிடத்தில் மாலுமிகள் நீரில் குதித்தார்கள். கப்பல் பாயைக் கடலில் இறக்கினார்கள். அதைக் கப்பலுடன் சேர்த்துக் கட்டினார்கள். கப்பல் பாயில் குளிக்கும் இடம் தயார் செய்து விட்டார்கள்.



கப்பலில் எங்களோடு இரண்டு சிறுவர்கள் இருந்தார்கள். இரண்டு சிறுவர்களும் எல்லோருக்கும் முதல் நீரில் குதித்தார்கள். கப்பல் பாயில் அவர்களுக்கு இடம் போதாமல் இருந்தது. ஆகவே அவர்கள் திறந்த கடலில் போட்டி போட்டுக்கொண்டு நீந்தத் தீர்மானித்தார்கள்.

இரண்டு சிறுவர்களும் மீன்களைப்போல நீரில் உடல்களை நீட்டிக் கொண்டு, நங்கூரத்துக்கு மேல் சிறு பீப்பாய் மிதந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி முழுப்பலத்துடனும் நீந்தி னார்கள்.


ஒரு சிறுவன் முதலில் மற்றத் தோழனை முந்தினான். ஆனால் பின்னர் பின்தங்கலானான். அந்தச் சிறுவனுடைய தந்தை, வயதான பீரங்கி வீரன். அவர் கப்பலின் மேல்தட்டில் நின்று கொண்டு தன் மகனை ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்.

புதல்வன் பின்தங்கத் தொடங்கியதும் 'விட்டுக்கொடுக்காதே முழு மூச்சாகப் பாடுபடு' என்று மகனைப் பார்த்துக் கத்தினார்.

திடீரென்று மேல் தட்டிலிருந்து ஒருவன் 'சுறாமீன்' என்று கூச்சலிட்டான். அந்த இராட்சதக் கடல் விலங்கின் முதுகை நாங்கள் எல்லோரும் நீரில் கண்டோம்.

சுறாமீன் நேரே சிறுவர்களை நோக்கி நீந்திற்று.

திரும்புங்கள்! திரும்புங்கள் போகாதீர்கள்! சுறாமீன்! என்று கூப்பாடு போட்டார் பீரங்கி வீரன். ஆனால் அவர் சொன்னது சிறுவர்களின்காதில்விழவில்லை. அவர்கள் மேலே நீந்திச் சென்றார்கள். முன்னைவிடக் குதூகலமாகவும் உரக்கவும் சிரித்தார்கள். ஆரவாரித்தார்கள்.



பீரங்கி வீரனின் முகம் பேய் அறைந்ததுபோல வெளிறிப் போய்விட்டது. அவர் கல்லாய்ச் சமைந்து சிறுவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மாலுமிகள் படகை இறக்கி, அதற்குள் குதித்து துடுப்புக்களைச் சாய்த்து தங்கள் வலுவெல்லாம் வைத்துச் சிறுவர்களின் பக்கம் படகைச் செலுத்தினார்கள். ஆனால் அவர்கள் சிறுவர்களை நெருங்க முன்னர், சுறாமீன் அவர்களுக்கு இருபது அடிக்குள் கிட்ட நெருங்கி விட்டது.

கப்பலில் இருந்தவர்கள் ஆரம்பத்தில் சத்தமிட்டது சிறுவர்கள் காதில் விழவில்லை. சுறாமீனையும் அவர்கள் பார்க்கவில்லை. எதேச்சையாக சிறுவர்களில் ஒருவன் நீந்தியவாறே பின்புறம் திரும்பிப் பார்த்தான்.

படகில் இருந்தவர்கள் கையசைப்பது தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். சுறாமீன் நெருங்கி வருவது தெரிந்தது. மறு சிறுவனை எச்சரித்தான். சிறுவர்கள் இருவரும் ஆளுக்கொரு பக்கமாக நீந்தி அப்பால் போனார்கள்.

எல்லோரும் போட்ட கூக்குரல் பீரங்கி வீரனைத் தட்டி எழுப்பியது போலிருந்தது. அவர் பாய்ந்து பீரங்கிகளின் பக்கம் போனார். பீரங்கி வாயைத் திருப்பினார். பீரங்கியை ஓட்டினாற்போல நின்றுகொண்டார். குறி பார்த்தார். பின்னர் வத்தியை எடுத்தார்.

கப்பலில் இருந்த நாங்கள் எல்லோரும் பயத்தால் விறைத்துப்போய் என்ன நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். வெடி அதிர்ந்தது. பீரங்கி வீரன் பீரங்கிக்குப் பக்கத்தில் தடாலென விழுந்து கைகளால் முகத்தை மூடிக்கொண்டதை நாங்கள் பார்த்தோம். நிமிடநேரம் புகை எங்கள் கண்களில் சூழ்ந்தது. சுறாமீனுக்கும் சிறுவர்களுக்கும் என்ன நேர்ந்தது என்பதை நாங்கள் காணவில்லை.

நீருக்கு மேலே புகை சிதறிக் கலைந்ததும் நாலாபுறமும் முதலில் தணிந்த முணுமுணுப்புக் கேட்டது. சிறிது நேரத்தில் இந்த முணுமுணுப்பு வலுத்தது.

முடிவில் உரத்த சந்தோஷ ஆரவாரம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் கேட்டது. வயதான பீரங்கி வீரன் கண்களைத் திறந்தார். எழுந்திருந்து கடலில் பார்வையைச் செலுத்தினார். இறந்த சுறாமீனின் மஞ்சள் வயிறு அலைகளில் மிதந்து அசைந்தது. சில நிமிடங்களில் படகு சிறுவர்களை நெருங்கி அவர்களைக் கப்பலில் கொண்டு சேர்த்தது.

# மூளைக்கு வேலை

1. ஒருவர் பலாப்பழம் வாங்கச் சந்தைக்குச் சென்றார். அவரிடம் இரண்டு ரூபா, ஐந்து ரூபா குற்றிகள் மட்டுமே இருந்தன. வேறு சில்லறைகள் எதுவுமேயில்லை. பலாப்பழ வியாபாரி, பலாப்பழம் ஒன்றின் விலை 13 ரூபா எனக் கூறினார். அவரிடமும் வேறு சில்லறைகள் எதுவுமில்லை. பலாப்பழம் வாங்கச் சென்றவர் எப்படி 13 ரூபா அளிப்பார்? நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள்?

2. 13 குருவிப் பொம்மைகளின் விலை ரூபா 104 ஆகும். ஒரு குருவிப் பொம்மையின் விலை என்ன?

## சென்றவார விடைகள்

| | |
|---|---|
| 1. 1454836 நூல்கள் | நூல்கள் |
| 2 நூல் நிலையங்களில் ஒன்றில் | 767895 |
| மற்றொன்றில் குறைவு | 80954 |
| மற்றொன்றில் இருப்பது | 686941 |
| முதல் நூல் நிலையத்தில் | 767895 |
| | 1454836 |

2. - 259 நாட்கள்
- 4 நாட்கள்

செந்தூரன் எந்தக் கயிற்றின் வழியாகப் போனால் தனது நாயைப் பிடிப்பான்




## இலங்கையைப் பற்றிய பொது அறிவு

- ▲ தேசிய மலர் - நீலோற்பலம்
- ▲ தேசிய மரம் - நாகமரம்
- ▲ தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்.
- ▲ மிக நீண்ட நதி - மகாவலிகங்கை.
- ▲ உயரமான மலைச்சிகரம் - பேதுருதாலகால மலை.
- ▲ மிகப்பெரிய தாவரவியற் பூங்கா - பேராதனைப் பூங்கா
- ▲ இயற்கைத் துறைமுகம் - திருகோணமலை.

ம.சிவகௌரி
தரம் - 07
பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை

## விடுகதைகளும் விடைகளும்

1. நன்னுவார் தின்னமாட்டார். அதுஎன்ன?
2. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ , என்ன பூ?
3. காய்ப்பார் பூப்பர் கலகலப்பார். காகம் இருக்கக் கொப்பில்லை. அது என்ன?
4. வானம் விடும் கண்ணீர்த்துளிகள். அதுஎன்ன?

### விடைகள்

1. [illegible]
2. சிரிப்பு.
3. [illegible]
4. மழை.

- சு.சுவேந்தன்
தரம் -09
கிளி. பளை மத்திய கல்லூரி

## பொது அறிவு

1. உலகிலேயே நீளமான வேர்களைக் கொண்ட மரம் எது? - பைன் மரம்
2. சார்க் அமைப்பு எப்போது தொடங்கியது? - 1985
3. காசநோய் கிருமியைக் கண்டு பிடித்தவர் யார்? - றோபேளாட் கொர்
4. முதன் முதலில் அஞ்சல் அட்டையை அறிமுகம் செய்த நாடு எது? - அவுஸ்ரேலியா
5. இந்தியாவின் முதல் பத்திரிகை எது? - அகிரா குருசேவா

வ.சுஜீத்தா
தரம் -09
வதிரி திருஇருதயக் கல்லூரி



## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் - சு.மயூரன்
தரம் - 09
பாடசாலை - ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் - ஓவியம் வரைதல் பத்திரிகை வாசித்தல்.





பெயர் - ம. அனோஜினி
தரம் - 06
பாடசாலை - கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் - கலைத்துறை.

பெயர் - கு.அஜந்தினி
தரம் - 07
பாடசாலை - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் - புத்தகம் வாசித்தல் நடனம் ஆடுதல்.

பெயர் - சீ.வசந்தி
தரம் - 08
பாடசாலை - யாழ்/ சித்திவிநாயகர் வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் - கணினித்துறை விளையாட்டுத்துறை.

பெயர் - ச.நிஷாலினி
தரம் - 05
பாடசாலை - வேலணை சைவப் பிரகாச வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் - பத்திரிகை வாசித்தல்.

பெயர் - தி.தயாபரன்
தரம் - 06
பாடசாலை - யாழ்/ கம்பர்மலை வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் - விளையாட்டுத்துறை.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................... திகதி .................... ஒப்பம்

.................... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## வெனில்லாவின் வினோதம்

படரும் ஓகிட் வகையைச் சேர்ந்தது வெனில்லா செடி. பூமிக்கு அடியில் செல்லும் சாதாரணமான வேர்களும் இதற்கு உண்டு. இவை தவிர தான் படரும் மரங்களோடு இணைத்துக்கொள்ள காற்றில் சஞ்சரிக்கும் வேர்க்கால்களும் அதற்கு உண்டு. ஓகிட்டில் 20,000 வகைகள் உண்டு. ஆனால் இந்த வகை மட்டுமே வர்த்தக ரீதியாகப் பயன்படுகிறது.



# பாடும் சிறகு

உள்ளான் குருவி என்று ஒரு அற்புதமான பறவை உள்ளது. அது பாடும்... அது எப்படிப் பாடுகிறது தெரியுமா, சிறுவர்களே? அது சிறகினால் பாடுகின்றது.



அதனுடைய இறக்கையில் ஒரு விசேட பாடும் சிறகு உள்ளது. உள்ளான் குருவி பறக்கும்போது அதற்குப் பாட வேண்டும் என்றால், தன்னுடைய பாடும் சிறகைப் பாடுவதற்கு ஏற்ற வாறு தனது இறக்கைகளை நேரப்படுத்திக் கொள்கிறது. அது மெல்லிய, எதனுடனும் ஒப்பிட முடியாத ஒரு ஒலியை எழுப்புகிறது. இது வயலினை மீட்டும் போது எழும் ஒலியையும், மெல்லிய நாணல் காற்றில் அசையும் போது எழும் ஒலியையும் போலிருக்கும்.

ஒருநாள் துயரமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. உள்ளான் குருவி தன்னுடைய பாடும் சிறகை இழந்து விட்டது.

அந்தச் சிறகு தரையில் எங்கோ விழுந்து விட்டது போலும்... உள்ளான் குருவிக்குப் பாட வேண்டும் போல் இருந்தது. ஆனால் பாடும் சிறகு அதனிடம் இல்லையே.

சிலநாட்களின் பின்னர், நரேஷ் என்ற சிறுவன், உள்ளான் குருவி தொலைத்த பாடும் சிறகைக் கண்டுபிடித்தான். அதை எடுத்துக் கொண்டு ஓடினான். சிறகு பாடியது. உள்ளான் குருவி தனது சிறகின் பாடலைக் கேட்டதும் சிறுவனிடம் பறந்து வந்து வேண்டியது:

'சிறுவனே, என்னுடைய பாடும் சிறகைத் தா. பாட்டு இல்லாமல் என்னாலிருக்க முடியாது?'

ஆச்சரியமடைந்த நரேஷ் பாடும் சிறகை மீண்டும் உள்ளான் குருவிக்கே திருப்பித் தந்தான்.

பல வருடங்கள் கழிந்தன. நரேஷ் வளர்ந்து பெரியவனாகி விட்டான். ஒருநாள் தோட்டத்தில், உள்ளான் குருவி ஒன்று பாடியவாறு பறந்து செல்வதைக் கண்டான். உடனே அவனுக்கு சிறுவயதில் தான் கண்டெடுத்த உள்ளான் குருவியின் சிறகும், அதனைத் தொலைத்த உள்ளான் குருவியும் ஞாபகம் வந்தது.

பெரியவனான நரேஷ் பின்வருமாறு நினைத்துக் கொண்டான். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய பாடும் சிறகு உள்ளது. பாடும் சிறகு இல்லாத மனிதன் மகிழ்ச்சியற்றவன். உங்களிடமும் பாடும் சிறகு உள்ளதா?

❖❖❖

# முல்லாவின் அதிசயச் செயல்

முல்லா, இளைஞனாக இருந்தபோது, யார் எதைச் சொன்னாலும் அதற்கு எதிராக எதையும் செய்யும் பழக்கத்தை வைத்திருந்தார். வலது பக்கம் போ என்றால், இடது பக்கம் போவார். 'மேலே பார்' என்றால் கீழே பார்ப்பார்.

இதனை முல்லாவின் வீட்டில் உள்ள எல்லோரும் நன்கு அறிந்திருந்தனர். அதனால், முல்லாவிடம் எதையும் சொல்லும்போது எதிரிடையாகவே சொல்வார்கள். முல்லா வலது பக்கம் அமர வேண்டுமானால், 'முல்லா இடது பக்கம் இரு', என்று கூறுவார்கள். அவர் உடனே வலது பக்கம் அமர்ந்து விடுவார்.

அன்று முல்லாவுக்குப் பதினாறாவது பிறந்த நாள். முல்லா, வீட்டின் முன்னால் கழுதையின்மேல் கோதுமை மா நிறைந்த கூடையை ஏற்றிக்கொண்டிருந்தார். அப்பொழுது கூடை வலது பக்கமாகச் சாய்வதை அவரது தந்தை கண்டார்.

உடனே, 'முல்லா கூடையை இடது பக்கமாகத் தூக்கிப்பிடி' என்று சொன்னார். அவருடைய தந்தை. அவ்வாறு சொன்னால் முல்லா வலது பக்கமாகத் கூடையைத் தூக்கிப் பிடிப்பார். அதனால் கூடை சாயாது என்று அவர் நினைத்தார்.

ஆனால், முல்லாவோ, தந்தை கூறியவுடன் கூடையை இடது பக்கமாகவே தூக்கிப் பிடித்ததால், கூடை மேலும் சாய்ந்து கூடையிலிருந்த மா முழுவதும் கீழே சிதறியது.


இதனால் மிகவும் கோபமடைந்த முல்லாவின் தந்தை, 'முல்லா, நீ இடது பக்கம் தூக்கிப்பிடி என்றால் வலது பக்கம் தூக்கிப் பிடிப்பாய். ஆனால் இன்று ஏன் இவ்வாறு செய்தாய்' என்று கேட்டார்.



அதற்கு முல்லா 'தந்தையே! இன்று எனக்குப் பதினாறாவது பிறந்த நாள். ஆதலால், இன்று முதல் குழந்தைத்தனமான செயல்களை விட்டு விட்டு அறிவுள்ள மனிதனாக செயற்படமுடிவு செய்துள்ளேன். அதனால்தான் நீங்கள் சொல்லிய படி நான் செய்தேன்? என்றார்.



# வார்த்தை விளையாட்டு






**இடமிருந்து வலம்**

1. யானையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கப்பயன்படும் கருவி.
3. வரலாறு.
5. சிறு அலகும் மெல்லிய கால்களும் உடைய பழுப்பு நிறப் பறவை.
8. ஒரு பழம்.
9. அனுபவம் ஏற்படுத்தும் உறுதி.
12. உரக்கப்படித்தல் அல்லது இசைக் கருவிகளை மீட்டுதல்.
14. கோயில்.

**மேலிருந்து கீழ்.**

2. எடுக்க எடுக்க உணவு குறை யாது இருப்பதாகக் கூறப்படும் பாத்திரம்.
4. அறுவைச் சிகிச்சை.
6. தான் முன்வைக்கும் கருத்தின் நியாயமின்மையை உணர்ந்தும் வீணாகச் செய்யும் வாதம்.
7. பல வழிகள் இருக்கும்போது ஒரு இடத்தை அடையும் சுருக்கு வழி.
11. ஒன்றின் மீதான தீவிரம்.
12. ஓம்





நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

திருக்குறள்

## நமது நோக்கு

### வயிற்றில் அடிக்கும் செயல்

எரிபொருட்களின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கின்றது. இந்த விலையுயர்வு - முன்னெப்போதும் இல்லாதளவுக்குத் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

வழக்கம் போலவே - சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பையும் - பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தை எதிர்நோக்குவதையும் காரணம் காட்டியே, இந்த விலையுயர்வுக்கும் தூபமிடப்பட்டிருக்கிறது.

இம்முறை அரசாங்கம் சாதாரண மக் களை அதிகம் பாதிக்கக் கூடிய வகையில், விலையுயர்வை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பொதுவாக எரிபொருள் விலை அதிகரிப்பு என்று வரும்போது - பெற்றோலின் விலையை அதிகளவில் உயர்த்தவும் - மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்றவற்றின் விலையைக் குறைந்த அளவுக்கு அதிகரிக்கவுமே நடவடிக்கை எடுக்கப்படுவது வழமை.

ஆனால், இந்த மரபை மீறும் வகையில் பெற்றோலின் விலையை 4 ரூபாவால் உயர்த்தவும் - டீசலின் விலை 8 ரூபா 50 சதத்தாலும் மண்ணெண்ணெயை 17 ரூபா 80 சதத்தாலும் அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

பெற்றோல் வாகனங்களை ஓரளவுக்கு வசதி படைத்தோரே பயன்படுத்துவதாலும் - உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பெற்றோல் அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாலும் - பெற்றோலின் விலை அதிகரிப்பின் தாக்கம் சாதாரண மக்களை அதிகம் பாதிப்பதில்லை.

இதனால் அரசாங்கம் பெற்றோல் மீதே அதிகம் கைவைப்பதுண்டு. ஆனால், சாதாரண மக்களால் விளக்கு மற்றும் சமையல் தேவைகளுக்கென மண்ணெண்ணெய் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது.

அதுபோன்றே டீசல்தான் உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்துக்கும் - போக்குவரத்துக்கும் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இப்போது டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளை பெருமளவில் அதிகரிக்க முற்படுவதால் சாதாரண மக்களே பெரும் பாதிப்பை எதிர்நோக்கவுள்ளனர்.

போக்குவரத்து, உணவு, உள்ளிட்ட வாழ்க்கைச் செல வின் அனைத்து பரிமாணங்களையுமே இந்த விலையுயர்வு ஆட்டம் காணச்செய்யும் என்பதில் எந்த வித சந் தேகமும் கிடையாது.

எரிபொருட்களின் விலைகளைக் கண்மூடித்தனமாக சாதாரண மக்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது நாட்டு மக்களுக்குச் செய்யும் மிகப் பெரிய துரோகமாகும்.

ஒவ்வோரு தேர்தலிலும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கப்போவதாக வாக்குறுதி கொடுத்து ஆட்சிப்பீட மேறும் ஆட்சியாளர்கள் எல்லோருமே அந்த வாக்குறுதிகளை மறந்துவிடுகின்றனர்.

விலைவாசி உயர்வு எமது நாட்டில் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள சூழலில் - இந்த நிலையை படுமோசமாக்குவதற்கே எரிபொருள் விலை உயர்வானது வழிவகுக்கும்.


பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாக காரணம் காட்டி எரிபொருட்களின் விலைகளை அரசாங்கம் மனம் போனபடி உயர்த்திக் கொள்வதை நாட்டுமக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஏனென்றால் - இந்திய நிறுவனங்களுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை விற்கத் திட்டமிடும் அரசு - இந்திய நிறுவனங்கள் எவ்வாறு இலாபத்துடன் செயற்படுகின்றன என்பதைக் கருத்தில் எடுத்தால், இந்த நிலை வராது.

ஏற்கனவே இலங்கையில் பெற்றோலிய விற்பனையில் ஈடுபடும் இந்திய நிறுவனங்கள் பெருமளவில் இலாபத்தைக் காட்டியுள்ளன. எனவே, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடே நட்டத்தை ஏற்படுத்துகிறதே தவிர, வியாபாரத்தினால் நட்டம் ஏற்படவில்லை.

தமது நிர்வாகக் குறைபாடுகளை அரசு நாட்டு மக்களின் வயிற்றில் அடிப்பதாகப் பயன்படுத்திக் கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சாதாரண மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளை மறந்து செயற்பட அரசு முனைந்தால் அதன் பின்விளைவுகளை அரசாங்கமே அனுபவிக்க நேரிடும்.

## நாடும் நடப்பும்




செய்தி:- இலங்கை கடற்படைக்கு அமெரிக்கா வழங்கிய கரேஜஸ் கப்பல் கொழும்பு வந்தது.

### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சர்வதேச சமூகம் அமளியைத்தான் பார்க்கும் அமைதியைப் பார்க்காதோ!

சர்வதேச சமூகம் என்று எதற்கெடுத்தாலும் பலரும் சொல்கிறார்கள். இந்தச் சர்வதேச சமூகம் இலங்கையில் அமளி ஏற்பட்டால்தான் திரும்பிப் பார்க்குமா? அமைதி நிலவும் சமயத்தில் அமைதி கெடுக்கும் செயல்களைத் தட்டிக்கேட்காமல் அமைதியாகத்தான் இருந்துவிடுமா? இப்படியொரு கேள்வியைக் கேட்டபடியே வந்து உட்கார்ந்தார் நண்பர் பரமசிவம்.

என்ன சர்வதேச சமூகத்திடம் இன்று உங்கள் கோபம் திரும்பியிருக்கிறதுபோல் தெரிகிறதே என்றேன்.

பின் என்ன? போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியவில்லை. விவசாயம், தோட்டச்செய்கை என்று தினமும் காலையில் எழுந்து தங்கள் வயல்களுக்கோ, தோட்ட நிலங்களுக்கோ சென்று தாம் இட்ட பயிர்களைப் பார்த்து அன்றைக்கு எடுக்க வேண்டியவற்றை எடுக்கவும், பயிர்களுக்கும், செடிகளுக்கும் நீர் பாய்ச்சவும் வேண்டியிருந்தால் மருந்து தெளிக்க வேண்டியிருந்தால் மருந்து தெளிக்கவும் செய்வார்கள். இந்தப் பயிர்கள், செடிகளிலிருந்து பயன்பெறுவது மட்டுமல்ல அவற்றைப் பார்த்து அவற்றின் வளர்ச்சியிலேயே அந்த நிலத்துக்குச் சொந்தக் காரர்கள் பூரித்து நிற்பார்கள். இந்த நிலத்தையும், பயிர்களையும், செடிகளையும் ஒரு நாளைக்குப் போய்ப் பார்க்காவிட்டாலும் அவன் நோயாளிபோல் ஆகிவிடுவான். இப்பொழுது இந்த நிலத்துக்கு அவனால் போகமுடியாது. முன்பு கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பற்றித்தான் கவலைப்படுவான். இப்போதோ முள்ளுக்கம்பிகளுக்குப் பின்னால் காவல்நாய்கள் போல் நிற்பவர்களைப் பார்த்து நகரமுடியாமல் நிற்கிறான். இவனது இந்த சொந்த நிலத்துக்கே இன்று ஆபத்து வந்திருக் கிறது. உயர் பாதுகாப்பு வலயத்துள்ளிருக்கும் நிலத்துக்குப் பதிலாக வேறு இடத்தில் குடியிருக்க ஏற்பாடு செய்யப்படுமாம்! என்றார் பரமசிவம்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் இந்த நிலையுடன் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை மேலும் மோசம். இவர்கள் முன்பு போரினாலும் தொழில் செய்யமுடியாமல் இருந்தார்கள். இன்று கடற்கோளினால் இவர்கள் வீடுவாசல்களை இழந்தது மட்டுமன்றி படகுகள், வள்ளங்கள், மீன்பிடி வலைகள் என்று தொழில் செய்வதற்கான உபகரணங்கள் யாவற்றையும் ஆழிப்பேரலைக்குக் காவுகொடுத்து நிர்க்கதியாக நிற்கின்றனர். இவர்கள் மீளக்குடியமர்வதற்கு இன்னமும் நூறு மீற்றர் தொலைவிலா, இருநூறு மீற்றர் தொலைவிலா குடியிருப்பை அமைப்பது என்பதுபற்றி இன்னமும் முடிவாகவில்லை. இவர்களுக்கு வீடுகள் அமைப்பதற்கும் இன்னமும் சரியான திட்டம் வகுக்கப்படவில்லை என்றேன் நான்.

போரினாலும், கடற்கோளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு அவலநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு மக்களைப் பற்றி சிறிலங்கா அரசாங்கமோ, ஆட்சி அதிகாரத்துக்குப் போட்டிபோடும் தென்னிலங்கை அரசுத் தலைவர்களோ, அரசியல்வாதிகளோ கிஞ்சித்தும் கவலைப்படுவதாக இல்லை. இன்று நாட்டில் போர் நிறுத்தப்பட்டிருப்பதால் தென்னிலங்கைத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் அடுத்து எப்படித் தாங்கள் ஆட்சிபீடத்துக்கு வரலாமென்பது பற்றித்தான் கவலைப்படுகிறார்கள். இலங்கைத் தலைவர்களும், அரசியல்வாதிகளும்தான் இப்படி நாட்டின் ஒருபகுதி மக்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்று வைத்துக்கொள்வோம். 'பயங்கரவாதமென்றும், சிறுவர் கடத்தல்' என்று பூச்சாண்டி காட்டியதும் துள்ளியெழும் சர்வதேச சமுதாயம் இப்பொழுது ஏன் கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது என்றார் பரமசிவம்.

ஒரு சம்பவத்தை உமக்கு நினைவூட்டுகிறேன். 'ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நிதி எம்மிடம் உள்ளது. ஆயினும் தற்போது நிரந்தர வீடமைப்புத் தொடர்பாகப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. ஆகவே அரசின் அனுமதிக்காக நாம் காத்திருக்கின்றோம்' என்று ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளை வழங்கிவரும் 'கரித்தாஸ்' அமைப்பின் பிரான்ஸ் நாட்டுச் செயலாளர்நாயகம் பீற்றர் லைவானி தெரிவித்திருக்கிறார். கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலை.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு எப்படியோ உதவிகள் கிடைத்துவிடுகின்றன. குடியிருப்பு வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன என்றேன்.

தமிழர் தாயக மக்களுக்கு புனர்வாழ்வு - புனரமைப்பு உதவிகள் கிடைப்பது பற்றிச் சிந்திப்பதற்குமுன் விடுதலைப் புலிகளை எப்படி தமிழ் மக்களிடமிருந்து வேறுபடுத்துவது பற்றித்தான் சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் சிந்திக்கிறார்கள். கடற்கோளினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தாயக மக்களுக்கு புனர்வாழ்வும், புனரமைப்பும் வழங்குவதற்கு விடுதலைப்புலிகளும், அரசும் இணைந்து பொதுக்கட்டமைப்பொன்றை அமைப்பது பற்றிய யோசனை இதோ நடைமுறைக்கு வருகிறதென்று கூறப்படுகிறது. ஜனாதிபதி சந்திரிகாவும் விரைவில் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என்று நம்பிக்கையோடு சொல்கிறார். ஆனால் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு விடுதலைப்புலிகளைச் சேர்த்து பொதுக்கட்டமைப்பு உருவாக்கினால் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையில் தமிழ் மக்களுக்கே புலிகள்தான் பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொண்டதாகிவிடுமென்று சிங்கள - பௌத்த அமைப்புக்கள் கூறி எதிர்க்கின்றன. ஜே.வி.பி. எதிர்க்கிறது. ஹெல உறுமய என்ற பிக்குகள் அமைப்பு எதிர்க்கிறது. இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு, அவலப்பட்டு நிற்கும் மக்களுக்கு உதவியளிப்பதையே விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரமாகிவிடுமென எதிர்ப்பவர்கள் இந்த நூற்றாண்டின் மிகக் கொடூரமான பயங்கரவாதிகள் என்றல்லவா சொல்லவேண்டும். மனிதாபிமான உதவியை மறுப்பவர்கள், மறிப்பவர்கள் பயங்கரவாதிகளே என்றார் பரமசிவம்.

அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஊடகங்களும் சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கீழுள்ள ஊடகங்களானாலும்சரி தமிர் தாயகத்தில் எந்தவிதத்திலும் விடுதலைப்புலிகள் மீது பழி சுமத்திச் செய்தி வெளியிடுகிறார்கள். ஆனால், இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவிக்குச்சென்று, பல உயிர்களைக் காப்பாற்றிய விடுதலைப்புலிகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தையும் பயங்கரவாதிகளுடன் சேர்த்துவிடுகிறார்கள் என்றேன்.

ஆட்கடத்தல், சிறுவர்களைப் படையில் சேர்த்தல், கொலைகள் என்று கூறப்படும் புகார்கள் பற்றி உலக அமைப்புகளும் உலக நாடுகளும் உடன் கருத்து வெளியிட்டுவிடுகின்றன. ஆனால் கடற்கோளினால் பாதிக்கப்பட்டு நூறு நாட்களுக்கு மேலாகியும் எதிர்காலம் பற்றிய எந்த நம்பிக்கையும் இல்லாமலிருக்கும் இந்த மக்களுக்கு உதவிகொடுக்காமல் தடுப்பவர்களையும், பொதுக்கட்டமைப்பு அது இது என்று காலங்கடத்திக்கொண்டிருக்கும் ஆட்சியினரையும், அதிகாரத்துக்கு வரத்துடிப்பவர்களையும் சர்வதேசசமூகம் இன்னமும் எதற்காக மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. போர் நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் நேர்மையாகப் பின்பற்றுவதால் தமிழ் மக்கள் அல்லல்படுகிறார்கள். ஆதிக்க சக்திகளும், அவர்களின் மக்களும் உல்லாசம் அனுபவிக்கிறாந்கள். சிங்கள பௌத்த மேலாண்மை பயங்கரவாதத்தை எதிர்த்து உலகில் தமிழ் மக்கள் குரலெழுப்ப வேண்டும் என்று ஆவேசமாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

### விஞ்ஞானிகளின் பதில் என்ன?

சந்திரமண்டலம் முதல் சனிமண்டலம் வரை ஆராய்ச்சி செய்வதற்காக விஞ்ஞானிகள் புதிய புதிய கண்டுபிடிப்புகள் மூலம் செயற்கைக்கோள்களை அனுப்பினார்கள். தாங்கள் புதிய சாதனை படைத்துவிட்டதாகப் பெருமையடித்தனர். வால் நட்சத்திரத்துடன் மோதிப்பார்க்க முனைந்தனர். நீங்கள் இயற்கையுடன் மோதிப்பார்க்கிறீர்கள். இயற்கை உங்களுடன் மோதினால் உங்களால் தாக்குப் பிடிக்க முடியுமா? நின்று பிடிக்க முடியுமா? என்று பூகம்பமும் சுனாமிப் பேரலைகளும் தோன்றின. இதற்கு மனிதனின் விஞ்ஞானிகளின் பதில் என்ன?

சி.இரத்தினம் யாழ்ப்பாணம்

அரசியல் -பரணி-

# சட்டம் படித்த கதிர்காமரின் முரண்பாடான சாட்சியங்கள்



தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர் மட்டக் குழுவினர் - ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள வேளையில் அமைச்சர் கதிர்காமரும் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தார். அமைச்சர் கதிர்காமரின் பயணம் புலிகளின் பரப்புரைகளுக்கு எதிரான கருத்துருவாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒழுங்கு செய்யப்பட்டதாகவே தோன்றுகிறது.

சந்திரிகா தனது இனவிரோதச் செயல்களை வெளிநாடுகளில் மூடி மறைக்க ஒரு வழங்கறிஞரைத் தேடினார். அவ்வாறு தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர் தனது பணியைத் திறமையாகவே செய்து வந்துள்ளார். தமிழ் மக்களின் விடுதலைக்கெதிரான பரப்புரைகளைச் செய்வதற்குத் தமிழ்ப் பெயருடைய ஒருவர் தேவையாக இருந்தது.

அந்தத் தேவையை நிறைவேற்றிவைப்பத்தில் கதிர்காமர் சோடைபோகவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கர வாதிகளாகக் காட்டுவதற்குத் தனது சட்ட அறிவை நன்கு பயன்படுத்திக் கொண்டார். கால ஓட்டத்தில் கதிர்காமரின் பொய்யான பரப்புரை நிலைத்து நிற்க முடியாமல் போய்விட்டது எனலாம்.

தமிழர் தரப்பு நியாயங்கள் அடக்கு முறைகளால் ஒடுக்கப்பட்ட காலத்தில் - அரசு சார்பான கருத்துக்கள் மாத்திரம் கதிர்காமரால் முன்வைக்கப்பட்டதால், அவரது எண்ணம் அப்பொழுது வெற்றி பெற்றது எனலாம். ஆனால் தற்பொழுது தமிழர் தரப்பு நியாயங்களும், உண்மைத் தன்மைகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பயணங்களால், உலக மக்களால் உணர்ந்து கொள்ளக் கூடிய நிலைக்கு எட்டியுள்ளன.

எனவே புலிகளின் பரப்புரையை எதிர்த்து, பரப்புரை செய்வதற்காகப் புலிகள் வெளிநாட்டிலிருக்கும் அதே காலப் பகுதியில் கதிர்காமர் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தார். தானும் ஒரு தமிழனென்று காட்டிக் கொண்டு, தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைக்கவே அவர் அங்கு சென்றார்.

கதிர்காமர் தன்னை ஒரு தமிழனென்று காட்ட முயற்சிக்கிறார். அவர் உண்மையில் யாராயிருக்க முடியும் என்றதற்குச் சிந்தனைச் சிற்பி - நாடாளுமன்றத்தில் கூறிய கருத்தொன்று மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

சிங்கள இனவாதத்தின் ஆழத்தைப் பற்றிக் கதிரவேற்பிள்ளை நாடாளுமன்றத்தில் உரையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது, அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்கா குறிக்கீடு செய்கிறார். மைத்திரிபால சேனநாயக்கா சிங்கள பௌத்தவராவார். அவர கோப்பாய் என்னும ஊரைச சேர்ந்த தமிழ்க் கிறிஸ்தவப் பெண்ணைத் திருமணம் செய்திருந்தார். திருமணம் நடந்து சில மாதங்களே ஆகியிருந்தது. தன்னைக் குறுக்கிட்ட மைத்திரிபால சேனநாயக்காவிடம் நீங்கள் பகலில் சிங்களவராகவும், இரவில் தமிழராகவும் இருக்கிறீர்கள் என்பதால் தான், இவ்வாறு பேசுகிறீர்கள் என்று குறிப்பிட்டார். கதிர்காமர் கூட இதேபோன்று தான்.

ஆனால் சற்று மாறுதலாகப் பகலில் தமிழராகவும், இரவில் சிங்களவராகவும் உள்ளார். ஆம் வெளிநாடுகளில் தான் தமிழரெனக் கூறிப் பரப்புரை செய்வதை வேறெவ்வாறு கூறமுடியும்.

### சட்ட அறிஞரின் முரண்பட்ட சாட்சியம்

இந்த முறை ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்ட கதிர்காமர் தனது வாதத்திறமையை வைத்து வெற்றி கொள்ளத் தவறிவிட்டார். அவரது கூற்றுக்கள் முன்னுக்குப் பின் முரண்பாட்டைக் காணக்கூடியதாக இருந்தது. அவரது பி.பி.சி ஒளிபரப்புச் சேவைக்கான நேர்முகத்தில் முரண்பாடுகளே அதிகம் நிறைந்திருந்தன.

சுனாமி அனர்த்த மீள் கட்டுமானத்திற்குப் பொதுக் கட்டமைப்புத் தேவையென்று விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்ததையும், அதனை உலகம் ஏற்றுக் கொண்டதையும் யாவரும் அறிவர். ஆனால் கதிர்காமர் இதனை முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல், சந்திரிகா அரசு பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த விரும்பியதாகவும் தற்பொழுது தான் புலிகள் அதற்குச் சம்மதம் அளித்திருப்பதாகக் கூறித் தடுமாறியிருக்கிறார்.

புலிகளின் தாமதமான பதிலால் தான் சில சட்ட விதிகள் தயாரிப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் கூறியுள்ளார். சுனாமி அழிவு ஏற்பட்டு மூன்று திங்கள் முடிந்தும் பொதுக் கட்டமைப்பு ஏன் ஏற்படவில்லை? என்றால் பாரிய முன்னெடுப்புக்கள் செய்யவேண்டியுள்ளதாக மழுப்பி விடுகின்றார். ஆனால் புலிகள் விட்டுக கொடுப்புகளுடன் மக்களின் அவசர தேவைக்காக நோர்வே கூறிய கட்டமைப்பை ஏற்றுள்ளனர். ஆனால் சந்திரிகா இன்னமும் பொதுக்கட்டமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் தான் அரசு பொதுக்கட்டமைப்பை முதலில் கூறி, அதில் பங்கு கொள்ளுமாறு புலிகளுக்கு அழைப்பு விடுத்ததாகவும் முரண்பாடாகக் கூறிக் குழப்புகிறார் கதிர்காமர்.

இதைவிட மோசமான முரண்பாடு ஜே.வி.பி பற்றிய கருத்தாகும் - பொதுக்கட்டமைப்பு உருவானால் ஜே.வி.பி அரசை விட்டு விலகிவிடும் என்கின்றார்களே என்று அவரிடம் கேட்கப்பட்டது. பொதுக்கட்டமைப்பு அரசுக்கு ஏன் தேவைப்படுகிறது. அரச இயந்திரம் தானாகவே எல்லாவற்றையும் செய்ய முடியுமென்றால், ஏன் புலிகளை அதற்குள் சேர்த்துப் பொதுக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும். அரசின் பங்காளிக் கட்சியின் எதிர்ப்பை ஏன் தேவையில்லாமல் தேடிக் கொள்ள வேண்டும். உண்மை நிலை - புலிகள் தான் கோரியுள்ளார்கள் பொதுக் கட்டமைப்பை. இதை உலகம் ஏற்றுக்கொள்ளுமாறு சிங்கள அரசுக்கு அழுத்தம் கொடுக்கிறது.

அரசின் பங்காளியான ஜே.வி.பி இதனை மூர்க்கமாக எதிர்க்கின்றது. இந்த யதார்த்தத்தை மூடி மறைக்கப் பெரும் பாடுபட்ட கதிர்காமர் - முன்னுக்குப் பின் முரண்பாடாகப் பேசுகிறார்.

அரசு முன்வைத்த கொள்கை என்றால் ஜே.வி.பி எதிர்த்திருக்காது. இது புலிகளின் கோரிக்கை. அதனால் ஜே.வி.பி எதிர்க்கிறது.

அது மாத்திரமல்ல, பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டாலும் ஜே.வி.பியினர் ஆட்சியிலிருந்து வெளியேறுவதில்லை எனத் தனக்குக் கூறியுள்ளார்கள் என்றும் கூறுகின்றார் அவர்.

விமல்வீரவன்ச நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார், சோமவன்ச அமரசிங்க கூறியுள்ளார், ஜே.வி.பியின் அங்கமான தேசப்பற்றுள்ள இயக்கம் கடுமையாகக் கூறுகிறது பொதுக்கட்டமைப்பு வேண்டாம் என்று. ஆனால் கதிர்காமர், ஜே.வி.பிக்கும் வக்காலத்து வாங்குகிறார்.

மொத்தத்தில் பார்த்தால் கதிர்காமரின் அந்தப் போட்டி முரண்பாடுகள் நிறைந்ததாகவே அமைந்துள்ளது. கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்கு என்பர். அதேபோல் கதிர்காமரின் பரப்புரைக்கும் ஏற்பட்டு விட்டது. பி.பி.சி.யில் செவ்வி கண்டவரின் கேள்விகளுக்குச் சரியான பதில்களைக் கொடுக்க முடியாமல் தடுமாறிய சட்ட அறிஞரின் பதில்கள் - முற்று முழுதாக முரண்பாடுகள் நிறைந்ததாகவே உள்ளது.

இவருடடைய முரண்பாடான கருத்துக்கள் வேறு பல இடங்களிலும் தொடர்கின்றன. ஒரு நாட்டில் இரு படைகள் இருக்க முடியாது என்று கூறுகின்றார். புலிகளிடம் வான்படை உள்ளதா என்ற கேள்வி எழுப்பிய பொழுது, இதனை அவர் கூறுகின்றார். இலங்கைத் தீவில் இரு வேறு தரைப்படைகளும், கடற்படைகளும் உள்ளன. எல்லோரும் ஏற்றுள்ளனர்.

இப்பொழுது வான்படை சேர்ந்துள்ளது. இப்பொழுது திடுக்கிட்டு நித்திரையிலிருந்து எழுந்தவர் போல், ஒரு நாட்டில் எப்படி இரு படைகள் என்று கேட்கிறார். இலங்கைத் தீவில் சிங்களம் - தமிழீழம் என இரு நாடுகள். ஆகவே இரு படைகள் உள்ளன. அதாவது - இரு படைகள் இருப்பதால் இரு நாடுகள் உள்ளதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா?



அது மாத்திரமல்ல, அவர் கூறுகின்றார் இணைப்பாட்சி எப்படி அமையவேண்டும் என்று எமக்கு எவரும் திணிக்கக் கூடாது, திணிக்க முடியாது என்று. தமிழ் மக்கள் விரும்பும் சுயநிர்ணய உரிமையுடைய ஆட்சியை வெளிநாடுகள் வலியுறுத்தக் கூடாது.


இணைப்பாட்சி என்ற பெயரை வைத்துக் கொண்டு அரை வேக்காட்டுத் தீர்வைத் தமிழ் மக்கள் மேல் திணிக்கலாம் என்பதே இவரது நோக்கம். ஆனால் வெளிநாடுகள் எவ்வகையான இணைப்பாட்சி என்று கூறத் தேவையில்லை என்பவர், இந்தியாவின் தலையீடு தேவை, எத்தகைய ஆட்சி என்று இந்தியா கூற வேண்டிய காலம் வந்து விட்டது என்கிறார்.

வெளிநாடுகள் திணிக்கக் கூடாது என்று கூறும் கதிர்காமர், இந்தியா அறிவிக்கவேண்டிய காலம் வந்து விட்டது என்கிறார்.

இதுவரை காலமும் தான் செய்து வந்த பரப்புரைகள் கலைந்து விட்டதால், முரண்பாடாகப் பேசத் தொடங்கியுள்ளார் கதிர்காமர். உண்மை மெதுவாக ஆனால் உறுதியாக வேரூன்றத் தொடங்கி விட்டது. எனவே சட்டவாளர் கதிர்காமர் தமிழின விரோதப் பரப்புரையை விட்டு விலகி, தனது தொழிலில் அக்கறை காட்டினால், சிலவேளை அதில் வெற்றிகாண முடியும்.

சங்கர் பகுதி - 74

# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உணராயோ...



G.S, A.G.A இரண்டு பேரிட்டயும் நாங்கள் கதைச்சனாங்கள். அவையிட்ட நாங்கள் நிலாவெளியில அகதிகள் இருக்கிற இடத்துக்குக் கிட்ட காணி தாங்கோ எண்டு கேட்டனாங்கள். அதுக்கு அவர் அதெல்லாம் உறுதிக்காணி, ஒண்டும் செய்யேலாது. உங்களுக்கு கும்புறுபுட்டியில தான் போட்டிருக்கெண்டு. அதுக்கு நாங்கள், அது யானைக் காடெண்டு சொல்றாங்கள். அதில போய் இருக்க மக்கள் விரும்பேல்ல எண்டு சொன்னம்.

அதுக்கு A.G.A சொன்னார் ‘ஹபறணையை எடுத்துப் பாருங்கோ. எத்தினை குடும்பம் இருக்குது? அதுகளும் யானைக் காட்டுக்குள்ள போய் இருக்குதுகள் தானே?

உங்களுக்கு இப்ப சின்னக் கிராமமா அமைஞ்சவுடன பிறகு பயமில்ல’ எண்டு சொன்னார். ஆனா எங்களுக்கு அனேகமா சொந்த இடத்தில இருக்கிற மாதிரி வராது.

‘இஞ்சையிருந்து கும்புறுபிட்டி எத்தனை மைல்?’

‘அஞ்சு மைல். இனித்தரப் போறது ஆறாவது மைல்ல தான்.

மெயின் றோட்டை அண்டித் தான் தரப்போறாங்களாம். ஆனா சவத்தண்ணி. அங்கை நல்ல தண்ணியில்ல. கறண்ட் வசதி எல்லாம் போகுது. ஆனா அவங்கள் எல்லாம் செய்து தந்ததுக்குப் பிறகு தான் எங்களுக்கு முற்று.

இஞ்ச பாருங்களன். நாங்கள் இஞ்ச அகதியா வந்து இருந்தவுடன் ஓவர் நிறுவனம் என்ன செய்தது?

உடனடியாக உங்களுக்கு ரென்ற் தாறம் எழும்பிற்றுப் போங்கோ. 24 மணி நேரத்தில உங்களுக்கு அஞ்சு வீடு போட்டுத்தாறம் எண்டு கிரியெண்டவர் சொன்னார். இதுவரையிலும் எங்களுக்கு இருக்கிறதுக்கு நிரந்தரமான இடம் ஒண்டு கிடைக்கேல்ல.

நாங்க பிறகு வேற ஒரு வீட்டை போய் இருந்தனாங்கள். பிறகு அங்கே வெள்ளம் வந்தது. முழங்காலளவுக்குத்தண்ணி. அப்ப கக்கூசுக்கு கூட இருக்க இடமில்லயெண்டு தான் நாங்க திரும்பி வந்து இஞ்ச இருக்கிறம். அதுவும் நேற்றிரவு பெய்த மழைக்குப் பிள்ளைகளும், நாங்களும் குந்திக் கொண்டு தான் இருந்தம். அந்தளவு ஒழுக்கு.’

‘வைத்திய வசதிகள் என்ன மாதிரி?’

‘சர்வோதயத்தால் ஒரு வெள்ளைக்காரர் வந்து நேற்று (09.03.2005) மருந்து குடுத்தவங்களாம். நான் இந்த மரண சேட்டு பிக்கற் அலுவலாகப் போட்டன். பாருங்களன் இப்ப மூண்டு மாசமாப் போயிற்றுது. மரண சேட்டுபிக்கற் அலுவலுக்கு ஓடித்திரியுறம்.’

‘சுனாமியில செத்தவைக்கு உடன மரணச்சான்றிதழ் குடுக்கச் சொல்லி அரசாங்கம் அறிவிச்சிருக்கே. காலி, அம்பாந்தோட்டையிலயெல்லாம் குடுத்திட்டாங்களே.’

கவுமென்ற் அப்படி அறிவிச்சிருக்குதெண்டு சொல்லி G.S. இட்டையும் போமுக்குத் திரிஞ்சு, றெஜிஸ்ரரிட்டையும் திரிஞ்சி ஏலாம கடைசியா கோட்டுக்கு நாங்களாவே போய்க் கேட்டம்.

கோட்டில றெஜிஸ்ரர் பொம்புள ஒரு போம்தந்தா. அதைக் கொண்டந்து G.S இட்ட A.G.A யிட்ட நிரப்பி நாங்களும் ஒரு கடிதம் எழுதிக் கொண்டு போய்க் குடுத்தம்.

பிறகு G.S இட்ட ஒரு துண்டு இருக்கு. அதை வேண்டிக் குடுத்தால் பிறகு நேற்றுத்தான் எங்களக் கூண்டில ஏத்தினாங்கள். சாட்சிக் கூட்டில் ஏத்தி விசாரணை செய்து போட்டு நாளைக்கு (11.03.2005) வரச் சொல்லி சொல்லியிருக்கிறாங்கள்.

நாலாந்தம் போகைக்க வேலூர் ஆக்களுக்கு விசாரணை எண்ட படியால எங்களை அடுத்த நாளைக்கு வரச் சொன்னவை.


அடுத்த நாள் கோட்ஸ்நடந்து கொண்டிருந்த படியால், எங்களை விசாரணை செய்ய நேரம் காணாது எண்டாங்கள். பிறகு போக புத்தகம் முடிஞ்சுது திங்கட் கிழமை வாங்கோ எண்டிச்சினம். திங்கட்கிழமை போக சேர்க்குலர் மாறீட்டுது. இனி என்னால ஒண்டும் செய்யேலாது. புதுப் போமுகள் வந்தாத்தான் எண்டு அந்தப் பொம்புள சொன்னா. பிறகு கோட்ஸ்சில ஒரு போம் தந்தாங்கள். அந்தப் போமை நிரப்பி A.G.A இட்ட நிரப்பிக் கொண்டு, அவரிட்டை சைன் வேண்டிப் போட்டுக் கேட்டன், இதில கொறுணல் விசாரணையெண்டு கிடக்கு ஆரிட்ட வேண்டுரது எண்டு.

அவர் திருப்பி அதைவேண்டிப் பார்த்துப் போட்டு இதுவும் றிற்றேன் பண்ணியாச்சு. புதிசா ஒரு சேக்குலர் வந்திருக்கு. அதன்படி தான் செய்யலாம் எண்டு. நான் அப்படியிருந்தும் அவரிட்டை சைன் வேண்டி, நேற்று 09-03-2005 உறுதிப்படுத்தினாங்கள்.

இந்தவேளை குறுக்கிட்ட அவரது துணைவியார் ‘நாங்கள் புள்ளயக் கொண்டு வந்து வச்சிருக்கேக்கை ஹிதாயத்துல்லா சேர் போத்தல் விளக்குச் சரிக்கட்டி எண்ணை விட்டுக் குடுத்த விளக்குத்தான் வச்சுக் கொண்டு எங்கட புள்ளய வச்சிருந்தனாங்கள். ஹிதாயத்துல்லா சேர் இல் லாவிட்டால், எங்கட புள்ளய வச்சுக்கொண்டு அடம் வோடை மலையில இருட்டில தான் இருந்திருப்பம். (தொடரும்...)

# பாகிஸ்தானின் எண்ணத்தில் இடிவிழுந்த இந்தியாவுக்கான எப்.16 விமான விற்பனை



***அணுகுண்டுகளை வீச பாகிஸ்தானிடமும், இந்தியாவிடமும் சரியான விமானங்கள் இல்லை என்ற குறையை எப் – 16 ரக போர் விமானங்கள் போக்குமா?***

அணுகுண்டுகளை எப்-16 மற்றும் எப்-18 ரக விமானங்களால் வீச முடியும். ஆனால், இவற்றில் பெரும்பாலான குண்டுகள் பாகிஸ்தானிடம் இல்லை. எதிர்காலத்தில் ஆயுதப்போட்டிக்குத் தயார் செய்ய புதிய முயற்சியை அமெரிக்கா தொடக்கிவைத்திருக்கிறது. கடந்த 15 ஆண்டு கனவாக இருந்துவந்த எப்-16 வகை விமானங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா முன்வந்திருப்பதால் பாகிஸ்தான் எண்ணத்தில் பெரிய இடி விழுந்திருக்கிறது.

பாகிஸ்தானுக்கும் - அமெரிக்காவுக்கும் நீண்டகால இராணுவ உறவு இருந்துவந்திருக்கிறது. எதிர்பாராத விதமாக எப்-16 மற்றும் எப்-18 ரக விமானங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா முடிவுசெய்திருப்பது இது வரை இருநாடுகளின் வரலாற்றில் இல்லாத பெரிய கொள்கையளவிலான மாற்றமாக அமைந்துள்ளது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக, இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்குமிடையேதான் இராணுவ உறவு இருந்துவந்தது. அதற்குக் காரணம் அரசியல் ரீதியாக எந்த நாடு இந்தியாவை ஆதரிக்கிறதோ அந்த நாட்டிலிருந்துதான் இந்தியா இராணுவத் தளபாடங்களை இறக்குமதி செய்து வந்தது. எனினும், எலக்ரோனிக் போர் முறைகளால் அமெரிக்காவிடமிருந்து அதி நவீன கருவிகளை வாங்க இந்தியா கடந்த 4-5 ஆண்டுகளாக முயற்சிசெய்துவருகிறது.

### ஆயுத இறக்குமதி

இதுவரை அமெரிக்காவிடமிருந்து எந்தப் போர் விமானங்களையும் இந்தியா வாங்கவில்லை. பாரிய அளவில் இராணுவ தளபாடங்களை இறக்குமதி செய்ததும் இல்லை. 2003 இல் சில ராடர் கருவிகளை இந்தியா பெற்றது. சில கணினிக் கண்காணிப்புக் கருவிகளையும் இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கியுள்ளது. ஆனால், இந்திய விமானங்களில் பெரும்பாலானவை ரஷ்யாவைச் சேர்ந்தவை மிகுதி விமானங்கள் பிரான்ஸைச் சேர்ந்தவை.

### போர்க் கூட்டணி

பாகிஸ்தானைப் பொறுத்தவரை அதன் இராணுவம் அமெரிக்காவின் உதவியை நம்பித்தான் இருந்து வருகிறது. 1980 களில் ஆப்கானில் நுழைந்த ரஷ்யப் படைகளை விரட்ட பாகிஸ்தானின் உதவி அமெரிக்காவுக்குத் தேவைப்பட்டது.

இதற்குப் பாகிஸ்தானும் மகிழ்ச்சியுடன் உதவியது. பிரதிபலனாக 1983 முதல் 1987 வரை இராணுவ உதவிகளை பாகிஸ்தான் பெற்று வந்தது. அப்போது சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொண்ட பாகிஸ்தான் எப்-16 ரக போர் விமானங்களை அமெரிக்காவிடம் கேட்டது. இதனால் ஏறத்தாழ 40 விமானங்கள் பாகிஸ்தான் விமானப்படையில் அப்போது சேர்க்கப்பட்டன. எனினும் பாகிஸ்தானுக்கு அடுத்தடுத்து உதவ அமெரிக்கா தயங்கியது.

1990 களில் சீனாவிலிருந்து அணு ஆயுத ரகசியங்களை கடத்தியது மற்றும் யுரேனிய செறிவூட்டியது உட்பட அணு ஆயுதப்பரவல் விடயங்களை பாகிஸ்தான் மீறியது என்று குற்றஞ்சாட்டிய அமெரிக்கா - பிரஸ்லர் சட்டப்படி எப்-16 ரக விமானங்களை விற்கத் தடைவிதித்தது. 71 எப்-16 விமானங்களை இறக்குமதி செய்ய விரும்பிய பாகிஸ்தானுக்கு ஏனைய விமானங்கள் கிடைக்கவில்லை.

1998 இல் இந்தியாவும் பாகிஸ்தானும் அணுகுண்டுச் சோதனைகளை நடத்தியதால் இரு நாடுகளின் மீதும் பொருளாதார மற்றும் இராணுவத் தடையை அமெரிக்கா விதித்தது. 1999 இல் அப்போதைய பிரதமர் நவாஸ் ஷெரீப்பிடம் இருந்து இராணுவப் புரட்சி மூலம் நாட்டை முஷாரப் கைப்பற்றியதால் மேலும் ஒரு இராணுவத் தடையை பாகிஸ்தான் மீது அமெரிக்கா விதித்தது.

### திருப்பம் தந்த ஆண்டு

2001 செப்ரெம்பர் 11 இல் உலக வர்த்தக மையக்கட்டடத்தில் அல் கொய்டா தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல் - அமெரிக்க, பாகிஸ்தான் உறவு மீண்டும் மலரக் காரணமாக அமைந்தது. ஆப்கானில் தீவிரவாதத்துக்கு எதிரான போரை அமெரிக்கா நடத்தவேண்டும் என்றால் பாகிஸ்தான் உதவிதேவை என்று கருதியது. இதனால் உடனடியாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீதான தடைகளை அமெரிக்கா விலக்கியது.

சமீபத்தில் அமெரிக்க இராஜாங்க செயலர் கொண்டோலிசா ரைஸ் - இந்திய மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தார். அமெரிக்கா எப்-16 ரக விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்கும் என்றும் அறிவித்தார்.


இது கடந்த 15 ஆண்டுகால எதிர்பார்ப்புக்குக் கிடைத்த பெரிய வரப்பிரசாதம் என்று பாகிஸ்தான் கருதிய வேளையில் இந்தியாவின் எதிர்ப்பைச் சந்திக்க விரும்பாத அமெரிக்கா இந்தியாவுக்கும் விமானங்கள் வழங்கத் தயார் என்று அறிவித்தது. அமெரிக்காவின் இந்த அறிவிப்பு பாகிஸ்தான் எண்ணத்தில் இடி தாக்கியது போல் இருந்தது.

இந்தியா விமானத்தை வாங்குகிறதோ இல்லையோ - பாகிஸ்தான் கண்டிப்பாக விமானங்களை வாங்கும். தற்போது பாகிஸ்தான் வசமுள்ள ஏ-5 பான்டன் ரகவிமானங்கள் மற்றும் எப்-16 விமானங்கள் மூலம் அணுகுண்டுகளை வீசமுடியும். ஆனால், தற்போதுள்ள நிலையில் அதற்கேற்ப அவ்விமானங்களில் பாகிஸ்தான் ஏதாவது மாற்றம் செய்திருக்கிறதா, அணுகுண்டுகளை வைத்திருக்கிறதா என்பது தெரியவில்லை.

| விமானம் | பறக்கும் தூரம் கி.மீ., | சுமை கிலோ | வேகம் கி.மீ.,/மணி |
|---|---|---|---|
| ஜாகுவார் | 2,600 | 4,750 | 1836 |
| மிக்-29 | 1,500 | 3,000 | 2,080 |
| சுகோய்-30 | 1,500 | 8,000 | 2,248 |
| மிராஜ்-2000 | 1,850 | 6,300 | 2,692 |
| ஏ-5 பான்டன் | 600 | 1,000 | 1,370 |
| மிராஜ் 3-5 | 500 | 3,500 | 2,692 |
| எப்-16 | 850 | 2,000 | 2,448 |

ஆனால், பாகிஸ்தானுக்கு வழங்கப்படவுள்ள எப்-16 விமானங்கள் அணுகுண்டுகளை தாங்கிச் செல்லும் வசதியை கொண்டிருக்காதவை. இதனால்தான் இந்தியா எப்-16 விமானங்களில் மாற்றம் செய்து தருமாறு அமெரிக்காவைக் கோரிவருகிறது. மேலும், இந்தியா ஒரு இயந்திர விமானங்களைவிட இரட்டை இயந்திரம் பொருத்திய விமானங்களை விரும்புவதால் அமெரிக்கா எப்-18 ரக விமானங்களை வழங்க முடிவுசெய்துள்ளது. எவ்வாறாயினும், அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இந்தியாவை - பாகிஸ்தானுக்கு மேல் ஒரு படி அதிகமாக மதிக்கிறது என்பது தெரிகிறது. ஆனால், காலங்காலமாக இந்தியாவுக்கு விமானங்களை விற்று வரும் ரஷ்யாவுக்கும், பிரான்ஸுக்கும் ஒரு அடி விழுந்திருக்கிறது என்றே கூற வேண்டும்.



### ரஷ்யாவை பின்னுக்குத் தள்ளுகிறது அமெரிக்கா

உலக விமானப்படையில் 4 ஆவது பெரிய படை இந்தியாவினுடையது. தற்போது இந்தியாவிடம் ஆயிரத்து 500 இற்கும் மேலான விமானங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ரஷ்யாவின் மிக் ரகத்தைச் சேர்ந்தவை.

சுகோய் 30 ரக விமானங்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. மிக் ரக விமானங்கள் அனைத்தும் பழையதாகி விட்டதால் அவற்றை இந்தியாவே சொந்தமாகத் தயாரித்துள்ள எல்.சி.ஏ விமானம் மூலம் மாற்ற உத்தேசித்துள்ளது. இந்த எல்.சி.ஏக்கு தேவைப்படும் ஜி.இ 404 இயந்திரத்தையும் தாரைவார்க்க அமெரிக்கா தயாராகவுள்ளது. இந்தியா தற்போது விமானங்களை வாங்கச் சம்மதம் தெரிவித்து விட்டால் பின்பு ரஷ்யாவிடம் வாங்கும் எண்ணிக்கை குறைந்துவிடும்.

விமானங்களைப் பழுதுபார்த்தல், பராமரித்தல், தொழில்நுட்ப உதவி மற்றும் தேவையான மாற்றங்கள் செய்து தருதல் உட்பட்ட விடயங்களில் அமெரிக்கா இந்தியாவுடன் ஒத்துழைத்தால்தான் இந்தியா விமானங்களை வாங்குவது நல்லது. இத்தனை ஆண்டுகாலமாக இந்தியாவுக்கு அரசியல் ரீதியாக ஆதரவை வழங்கிய ரஷ்யாவையும் இந்தியா மறந்துவிடக்கூடாது.

மிக்-27 மற்றும் ஜாகுவார் விமானங்கள் தரைத்தாக்குதல்களில் சிறப்பானவை இவற்றில் மாற்றம் செய்தால்தான் இந்தியா நவீன குண்டுகளைப் பொருத்தமுடியும். சுகோய்-30 விண்ணில் தாக்குதல் நடத்தக்கூடியது. மிராஜ் 2000 பல்வேறு வகையான பணிகளை மேற்கொள்ளும். ஆனால், குறிப்பிட்ட பணியை திறம்பட செய்ய வேண்டிய விமானங்கள் இந்தியாவுக்குத் தேவைப்படுகின்றன. அதற்கு எப்-16 அல்லது எப்-18 விமானங்களே இந்திய பாதுகாப்புக்கு உதவும்.

**நன்றி:- தினமலர்**




# அமெரிக்க பெண்ணின் 15 ஆண்டுகால மரணப் போராட்டம் முடிவுக்கு வந்தது!



15 ஆண்டுகளாக மரணத்துடன் போராடிய அமெரிக்கப் பெண்ணின் உயிர் நேற்றுமுன்தினம் பிரிந்தது. உணவுக் குழாய் அகற்றப்பட்ட 13 ஆவது நாளில் அவர் உயிரிழந்தார். அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் பினல்லா பார்க் நகரைச் சேர்ந்தவர் டெர்ரி ஷிவாவோ. 41 வயதான இந்தப் பெண்ணுக்கு 1990 ஆம் ஆண்டு மாரடைப்பு ஏற்பட்டு மூளை செயலிழந்தது. 15 ஆண்டுகளாக அவர் உயிருக்குப் போராடி வந்தார்.

படுத்த படுக்கையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு திரவ உணவு குழாய்மூலம் சென்றது. இந்த நிலையில் டெர்ரியின் கணவரான ஷிவாவோ நீதிமன்றில் ஒரு வழக்குத் தொடர்ந்தார். வழக்கில் அவர் எனது மனைவி தினம் தினம் வேதனையுடன் உயிர்வாழ்கிறார். அவரைக் கருணைக்கொலை செய்ய நீதிமன்று அனுமதிக்கவேண்டும் எனக் கோரியிருந்தார்.

இதற்கு டெர்ரியின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்து மற்றொரு மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்தனர். அதில் எங்கள் மகளின் கணவருக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் நட்பு இருக்கிறது. அவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். எனவேதான் டெர்ரியைக் கருணைக் கொலைசெய்ய அனுமதி கேட்கிறார். அவரது கோரிக்கையை ஏற்கக்கூடாது. எங்கள் மகள் தொடர்ந்து உயிரோடு இருக்க அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த நீதிபதிகள் மருத்துவ குழு ஒன்றை அமைத்து டெர்ரியின் உடல்நிலையைப் பரிசோதித்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று உத்தரவிட்டனர்.

இதைத் தொடர்ந்து மருத்துவர் குழுவினர் டெர்ரியைப் பரிசோதித்து அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அதில் டெர்ரி தற்போதுள்ள நிலையில் மீண்டும் நலம்பெற்று சாதாரண பெண்ணாக வாழமுடியாது. இந்த நிலையில் வேண்டுமானால் படுத்த படுக்கையில் வாழலாம் என்று கூறப்பட்டிருந்தது. இதைத்தொடந்து நீதிமன்று டெர்ரிக்கு உணவு செல்லும் குழாயை அகற்றிவிடலாம் என்று பரபரப்பான உத்தரவை வழங்கியது. இதைத் தொடர்ந்து கடந்த 18 ஆம் திகதி டெர்ரியின் உடலுக்குச் செல்லும் உணவுக் குழாயை வைத்தியர்கள் அகற்றிவிட்டனர்.

டெர்ரியின் பெற்றோர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்தித்து முறையிட்டனர். ஆனால், அவர் தனது அதிகாரத்தின்படி இதில் தலையிடமுடியாது என்று கைவிரித்து விட்டார். இதைத் தொடர்ந்து இதுபோன்ற நிலைக்குத் தீர்வுகாண தனிச்சட்டம் கொண்டுவர அரசியல் கட்சிகள் வற்புறுத்தின.

இந்த நிலையில் டெர்ரியின் பெற்றோர் உயர்நீதிமன்றில் 6 ஆவது முறையாக வழக்குத் தொடர்ந்தனர். அதில் எங்கள் மகள் டெர்ரியை உயிர் வாழ அனுமதிக்கவேண்டும். கீழ் நீதிமன்ற உத்தரவை ரத்துச்செய்யவேண்டும். டெர்ரியின் அருகிலேயே இருக்க எங்களுக்கு அனுமதி வழங்கவேண்டும். இதற்கு டெர்ரியின் கணவர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவுக்கு எதிர்மனுவை டெர்ரியின் கணவர் ஷியாவோ தாக்கல் செய்தார். அதில் என் மனைவி சாக அனுமதிக்கவேண்டும். அவரது பெற்றோரை டெர்ரியின் அறைக்குள் அனுமதிக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் உணவு செல்லும் குழாய் அகற்றப்பட்ட 13 ஆவது நாளான நேற்றுமுன்தினம் டெர்ரி மரணமடைந்தார். உயிர்பிரியும்போது டெர்ரியின் பெற்றோரை உள்ளே செல்ல ஷியாவோ அனுமதிக்கவில்லை. டெர்ரியின் இறந்த உடலை மட்டும் பாக்க அனுமதிக்கப்பட்டனர்.




### தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதியுடைய விண்ணப்பாதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவி மாவட்ட இணைப்பாளர், உதவி உள சமூகவியல் மாவட்ட இணைப்பாளர், கணக்கீட்டு உதவியாளர், விசாரணை உதவியாளர், சட்ட உதவியாளர், விடியோ சாட்சி உதவியாளர், ஊடக உதவியாளர், உதவி உள ஆலோசகர், நிர்வாக உதவியாளர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வித் தகைமையாக மேற்படி விண்ணப்பம் தொடர்பான பாடநெறியைக் கொண்ட பட்டம் ஒன்றை அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பெற்றிருத்தல்வேண்டும்.

விண்ணப்பதாரி கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவிக்கான பெயரைக் குறிப்பிட்டு 2005.04.15 ஆம் திகதிக்கு முன்பு - தலைவர், தே.சி.பா.அதிகாரசபை, 330 தலவத்துகொட வீதி, மாதிவல, சிறிஜயவர்த்தனபுர. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கவேண்டும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சுனாமியால் அழிவுற்ற வீடுகளுக்கு பத்தாம் திகதிக்கு முன் நட்டஈடு!

## அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

சுனாமியால் அழிவடைந்த வீடுகளை மீளவும் புனரமைப்பு செய்வதற்கு அந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நிதியுதவியை வழங்குவதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி சந்திரிகா நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நூறு மீற்றர் எல்லைக்கு வெளியே முற்றாக அழிவடைந்த வீட்டிற்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா உச்சத் தொகையாகவும், பகுதியளவில் அழிந்த வீட்டிற்கு ஒரு லட்சம் ரூபாவும் நட்ட ஈடாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த வீடுகளை புதிதாக அமைக்க நட்டஈட்டினை வழங்க அரசாங்கம் தீர்மானித்தாலும் வங்கிகள் மூலம் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வீடுகளுக்கான நிதியுதவியை பெறுவதற்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள அனைவரையும் நாளை அந்தந்த பிரதேச வங்கிகளுக்கு அழைத்து அந்த தொகையை வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்த வீடுகள் அமைப்பதற்கான உதவுதொகை இதுவரை வழங்கப்படாமை சிக்கலான நிலைக்குச் சென்றுள்ளதாகவும், எதிர்வரும் பத்தாம் திகதி இந்த நடவடிக்கைகள் நிறைவடைய வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை முதலீட்டுச் சபையின் அனுமதியுடன் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டலை கொழும்பு தேரைவாவிக்கு அருகில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி சபைக்கு சொந்தமான காணியினைப் பெற்றுக் கொள்வதற்கும் கடந்த 30 ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (தே)

# விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகிறது!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடான - விடுதலைப் புலிகள், பத்திரிகையின் மாசி-பங்குனி மாதத்திற்குரிய 122வது குரல் சிங்கள அரசின் நிழல் யுத்தம் என்ற முகப்புச் செய்தியுடன் இன்று வெளிவருகிறது.

கானல் நீராகும் பொதுக்கட்டமைப்பு - எனச் சொல்லும் ஆசிரிய தலையங்கத்துடன் வரும் இவ்வேடு க.வே.பாலகுமாரன் எழுதிய மதம் கருவிலே தம்மையே கருவறுக்க தாமே கருக்களைக் காவுவோர் என்ற அரசியல் கட்டுரையும், விடு தலைப் புலிகளைச்சூழும் அழுத்தமும் கிழக்கு கொலைகளும், அரசின் ஆணைக்குழுவும், சிங்கள அரசியலின் சாராம்சம் - துப்பாக்கியைப் போலவே தென்றலும் புயலும் ஒடுக்குமுறைக்கான கருவிகள், சுனாமி மீள்குடியேற்றம்- மீண்டும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் போன்ற அரசியல் கட்டுரைகளுடன்.

தமிழர் தாயகத்தை துண்டாக்கும் சிங்களக் குடியேற்றங்கள் என்ற தமிழர் தாயகத்தின் தொடர்ச்சியை துண்டாட விளையும் குடியேற்றங்கள் பற்றிய தொடர் கட்டுரையின் முதற் பகுதியும், கலாநிதி க.சோமஸ்கந்தன் எழுதிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இன்றைய உலக ஒழுங்கும் - என்ற கட்டுரையும் தாங்கி இந்த ஏடு வெளிவருகிறது.

மற்றும் உலைக்களம், விழுதுகள், போராளிகளின் படைப்புக்களையும் வழமையான அம்சங்களையும் தாங்கி இவ்வேடு வெளிவருகின்றது.

# ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொம்மாந்துறையில் நேற்று மாலை 6.30 மணியளவில் 23 வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈ.பி.டி.பி உறுப்பினரான இவர் ஆதி மடத்தைச் சேர்ந்த புத்திரசிகாமணி குகதாசன் என அடையாளம் காணப்பட்டார்.

வீட்டிலிருந்து சைக்கிளில் ஆரையம்பகுதிக்குச் சென்று கொண்டிருக்கையில் வீதியில் வழிமறித்த இரண்டு இளைஞர்கள் இவருடன் உரையாடிவிட்டு தலையில் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

# மூன்று அமைச்சுக்களின் மோசடி குறித்த அறிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களுடன் தொடர்புடைய ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான மூன்று கடிதக் கோவைகள் பிரதியமைச்சர்கள் ஒன்றியத்தினால் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதக் கோவைகளில், தொழிலாளர்களுடன் தொடர்புடைய அமைச்சின் கீழ், நிர்வகிக்கப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து நிகழ்ந்துள்ள ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பாக விசேட அறிக்கை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், பிரதியமைச்சர் ஒன்றியத்துடன் தொடர்புடைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பிரதி அமைச்சர்கள் ஒன்றியத்தின் முக்கியஸ்தர் பிரதியமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே தெரிவிக்கையில் -

மூன்று அமைச்சுக்கள் தொடர்பாக பலவித ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர்பான தகவல்களை ஜனாதிபதியிடம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார். (தே)

# ஈழத் தமிழரின்....

கடந்த மூன்று வருடகாலமாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடை முறையில் இருந்துவரும் யுத்தநிறுத்தம், இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு தவிர்ந்த மற்றைய ஏழு மாகாணங்களுக்கு மட்டுமே பல நன்மைகளைக் கொடுத்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் உள்ள சரத்துகளுக்கு எதிராகச் செயற்படும் அரச படைகள், தமிழ்மக்களைப் பல விதங்களில் கொடுமைப் படுத்தி வருகின்றன.

படையினர் - தேவாலயங்கள், கோயில்கள் பலவற்றிலிருந்து தமது முகாம்களை விலக்கிக் கொண்ட போதும், இன்னும் பல இடங்களில் நிலைகொண்டுள்ளனர். அத்துடன், பாதுகாப்பு வலயம் என்று கூறி, போரினால் இடம்பெயர்ந்த மக்களை, இன்று பல வருடங்களாகியும் மீளச் சென்று தமது வீடுகளில் வசிக்க அனுமதிக்கவில்லை.

வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள், இந்தப் பாதுகாப்பு வலயங்கள் யாருக்கு என வினவுகின்றனர். இவை யாவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட வலயங்கள் என்பதே உண்மை. யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி - மூன்று வருடங்களுக்கு முன்னரே அரசாங்கம் தமிழ் கூலிப் படைகளை கலைத்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் கூலிப்படைகள் இன்றும் அரச ஆதரவுடன் கிழக்கில் பல அர

கடந்த டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியால் வடக்கு - கிழக்கே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இந்தப் பிரதேசங்களில் 24,500 இற்கு மேற்பட்டோர் இறந்தும், 10,000 இற்கு மேற்பட்டோர் காணாமற்போயும், ஏறக்குறைய ஏழு லட்சம் பேர் இடம்பெயர்ந்தும் உள்ளனர். இவர்களது 1,20,000 இற்கு மேற்பட்ட வீடுகள் அழிந்துள்ளன.

ஆனால், சுனாமி அனர்த்தங்களைப் பார்வையிட இலங்கைத் தீவிற்கு சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானையே வடக்கு - கிழக்கிற்கு செல்ல விடாது அரசு தடுத்து நிறுத்தியுள்ளது. இதன் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் உரிமைப்பத்திரத்தின் 100 ஆவது சரத்து, இலங்கை அரசால் மீறப்பட்டுள்ளது.

ஆகையால், இந்த 61 ஆவது கூட்டத் தொடர் உடனடியாக ஓர் குழுவை இலங்கைக்கு அனுப்பி வைத்து அங்குள்ள உண்மை நிலைகளை அறிந்து, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்க முன்வரவேண்டுமென வேண்டிக் கொள்கிறேன் என்று அவர் கூறினார்.

திருமதி டீயேற்றி மக்கோனால் தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூட்டுறவு...

இடர்காலக் கொடுப்பனவுகள், ஏனைய படிகளும் வழங்கப்படலாம் என்றும் வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணக்குழு அறிவித்துள்ளது.

### மனித...

இந்தச் சந்திப்பில் போர் நிறுத்தத்துக்குப் பின்னரான மனித உரிமைகள் மற்றும் சமாதான முயற்சிகள், சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மனித உரிமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் கடந்த இரண்டு தசாப்த காலப்போரின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வித இயல்பு நிலையும் தோற்றுவிக்கப்படவில்லை என்பதுடன் சுனாமிக்குப் பின்னர் உருவாக்கப் படவுள்ள பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் தாமதமடைந்து செல்கின்றமை அத்துடன்மனித உரிமை

### நாடாளுமன்ற...

# பிச்சை எடுத்த பெண் வெலிக்கந்தவில் கைது!

(பொலநறுவ)

பொலநறுவ - வெலிக்கந்தவில் 23 ஆவது டிவிசன் தலைமையகத் துக்கு முன்பாகப் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த பெண் ஒருவரைப் படையினர் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கைதுசெய்யப் பட்ட பெண் வெலிக்கந்த பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்டார்.

குறிப்பிட்ட பெண் மீது சந்தேகம் கொண்ட படையினர் அவரை சோதனையிடப்பட்ட போது - கையு றைக்குள் விடுதலைப் புலிகளின் துண்டுப் பிரசுரங்களை வைத்தி ருந்ததாகவும் -

இவர் தனது சொந்த இடம் குறித்து மாறுபட்ட தகவல்களை வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது.

# இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு இரகசிய விஜயம்!

(கொழும்பு)

இந்திய இராணுவத்தினரின் பயிற்சிப் பிரிவுத்தலைமை அதிகாரி லெப். ஜெனரல் ஆர்.கே.சிங் தலை

சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயா மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தப் பாதுகாப்பு வலயங்கள் யாருக்கு என வினவுகின்றனர். இவை யாவும் இராணுவ மயப்படுத்தப்பட்ட வலயங்கள் என்பதே உண்மை. யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி - மூன்று வருடங்களுக்கு முன்னரே அரசாங்கம் தமிழ் கூலிப் படைகளை கலைத்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் கூலிப்படைகள் இன்றும் அரச ஆதரவுடன் கிழக்கில் பல அரசியல் கொலைகளில் ஈடுபட்டுவருகின்றன. இதனால், வட - கிழக்கு வாழ் மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

## அடுத்த அமைச்சரவையில் இறுதி முடிவு எடுக்கப்படும்!

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைத்தல் மற்றும் திறைசேரி வசமிருக்கும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பங்குகளில் மூன்றில் ஒன்றை, பாரத் பெற்றோலியம் நிறுவனத்திற்கு வழங்குதல் என்பன தொடர்பான இறுதி முடிவு அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

அதற்கு முன்னர் அரச மற்றும் ஜே.வி.பி. பிரதிநிதிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

களை அறிந்து, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்க முன்வரவேண்டுமென வேண்டிக் கொள்கிறேன் என்று அவர் கூறினார்.

திருமதி டீயேற்றி மக்கோனால் தமிழர் மனித உரிமை மையத்தின் சர்வதேச இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்ற...

அரசாங்கத்தின் முக்கிய செயற்றிட்டங்கள் அனைத்துக்கும் ஜே.வி.பி. தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வருவதால் - விரக்தியடைந்திருக்கும் ஜனாதிபதி சந்திரிகா -நாடாளுமன்றத்தை இந்த மாத இறுதியில் கலைத்துவிடுவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

இன்றுடன் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் பூர்த்தியடைவதால் - நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் அவருக்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறு நடாளுமன்றத்தைக் கலைப்பதன் மூலம் ஜே.வி.பி யின் செல்வாக்கைக் குறைத்து - அரசாங்கத்தின் அடுத்த கட்ட நகர்வை மேற் கொள்ள முடியுமென்று ஜனாதிபதி சந்திரிகா நம்புவதாகவும் அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

| நாணய மாற்று வீதம் | | |
|---|---|---|
| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
| அமெரிக்க டொலர் | 99.12 | 100.09 |
| ஸ்ரேலிங் பவுண் | 186.70 | 189.25 |
| யூரோ | 128.02 | 130.06 |
| சுவிஸ் பிராங் | 82.46 | 83.89 |
| யென் | 0.9197 | 0.9360 |

அத்துடன் கடந்த இரண்டு தசாப்த காலப்போரின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் தமிழ் மக்களின் வாழ்வில் எவ்வித இயல்பு நிலையும் தோற்றுவிக்கப்படவில்லை என்பதுடன் சுனாமிக்குப் பின்னர் உருவாக்கப்படவுள்ள பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம் தாமதமடைந்து செல்கின்றமை அத்துடன்மனித உரிமை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் மனித உரிமைக் குழுவின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கரி உட்ரில்லா சர்வதேச விவகார செயலர் பவுலாமொய்ஸாண்டர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### தமிழ்...

நிகழ்ந்து கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் குறித்து விளக்கமளித்துள்ளார்.

தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அயர்லாந்து பயணத்தின் பின்னர் - புத்தாண்டுக்கு முன்னர் தாயகம் திரும்பத் தீர்மானித்துள்ள அதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா தமிழ் - சிங்கள புத்தாண்டு விடுமுறைக்கு லண்டன் செல்வதற்கு முன்னர், பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திடவுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறவுள்ளதாக ஜே.வி.பி. முன்னர் தெரிவித்திருந்தாலும் - தற்போது அது சாத்தியமில்லை என ஜனாதிபதி மதிப்பிட்டுள்ளார். இந்தப் பொதுக்கட்டமைப்பில் தான் கையொப்பமிடுவது அரசாங்கத்தின் தலைவியாக அல்லாது, மக்கள் அங்கீகாரம் பெற்ற ஜனாதிபதி என்ற வகையிலென ஜனாதிபதி கருதுவதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (தே)

## இந்திய இராணுவ அதிகாரிகள் இலங்கைக்கு இரகசிய விஜயம்!

(கொழும்பு)

இந்திய இராணுவத்தினரின் பயிற்சிப் பிரிவுத்தலைமை அதிகாரி லெப். ஜெனரல் ஆர்.கே.சிங் தலைமையிலான இராணுவ அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது.

கொழும்பு வந்துள்ள லெப். ஜெனரல் ஆர்.கே.சிங், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

ஆர்.கே.சிங்குடன் வந்துள்ள இந்திய இராணுவ அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பின்போது இரண்டு தரப்பு பாதுகாப்பு மற்றும் நட்புறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் அசோக ஜெயவர்த்தன, கடற்படைத் தளபதியும் கூட்டு நடவடிக்கைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப் படைத் தளபதி எயா மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்திய இராணுவ அதிகாரிகள் குழுவின் விஜயம் குறித்து எந்த உத்தியோகபூர்வ தகவலும் இரு நாட்டு அரசுகளும் வெளியிடாதமை குறிப்பிடத்தக்கது. (தே)

### பாப்பரசரின்...

யுள்ளதாகவும், அவரின் உடல் நிறை அபாயகரமான அளவுக்குக் குறைந்து விட்டதால் எந்தநேரமும் எதுவும் நடக்கலாமெனவும் அவர் தெரிவித் தார்.

கத்தோலிக்க மதத்தில் உயிருக்கு ஆபத்தான நேரத்தில் வழங்கப்படும் தேவ திரவிய அனுமான அவஸ்தை பூசுதல் பாப்பரசருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதன்மூலம் மரணம் சம்பவிக்க வாய்ப்புள்ளதென அர்த்தப்படாது.


தொலைபேசி இயக்குநர் தேவை

கணனி அறிவுள்ள, தொலைபேசி இயக்குனர் ஒருவர் (பெண்) தேவை.

தொடர்புகளுக்கு :
தில்லையம்பதி தொலைத்தொடர்பு நிலையம்
கோண்டாவில் சந்தி
T.P :021 222 2488

(அ-3991)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சொந்தக்காலில் மக்களை வாழவைப்பதே எமது நோக்கம்!

## பிரான்ஸ் கரித்தாஸ் நிறுவன செயலாளர் லெபனி



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தீவில் சமாதானம் நிலவுவதையே விரும்புகின்றோம். மக்களுக்கு உதவி செய்து சொந்தக் கால்களில் நின்று வாழ்வதையே விரும்புகிறோம் என, பிரான்ஸ் கரித்தாஸ் நிறுவன செயலாளர் நாயகம் பிஜர் லெபனி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் யாழ். குடாநாட்டுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த கரித்தாஸ் நிறுவன செயலாளர் நாயகம் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்தில் தனியார் நிறுவனங்களை விசாரணை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், நாம் ஏழை மக்களுக்கே உதவி செய்ய வந்தோம். இதற்கு மக்கள்தான் குரல் கொடுக்க வேண்டும். நாமும் அரசாங்கத்துடன் பேசுவோம். பிரான்ஸ் நாட்டு மக்கள் சார்பாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுககு எமது கவலையை தெரிவிக்கின்றேன். கரித்தாஸ் நிறுவனத்துக்கும் - இலங்கைக்கும் பல வருட காலமாகத் தொடர்பு உண்டு. உலக மக்கள் எல் லோருக்கும் உதவுவதே எமது நோக்கம்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு சில மணி நேரத்திற்குள் இலங்கை மக்களும் இங்குள்ள சில தனியார் நிறுவனங்களுமேதான் உதவி செய்தன. மறுநாள்தான் வெளிநாடுகளில் இருந்து உதவிகள் இலங்கைக்கு கிடைத்தன.

எமது நிறுவனம் சர்வதேச ரீதியில் 162 நாடுகளில் உள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் மழைகாலத்துக்கு முன்னர் பிரச்சனைகள் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்தக் காலில் நின்று வாழ்வதற்கே உதவிகள் செய்யப்பட வேண்டும்.

சுனாமியின் தாக்கத்துடன் சேர்த்து போர்க்காலத்தில் பாதிப்படைந்த பகுதிகள் மீளப்புனரமைக்கப்படுவது சிறந்தது என நான் நினைக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

கரித்தாஸ் நிறுவனத்தின் மூலம் தற்போது ரூபா 70 ஆயிரம் பெறுமதியான 400 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 500 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது. இதைவிட 400 மீன்பிடிப் படகுகள், இயந்திரங்கள் வலைகள் என்பன வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# யமஹா பிளாஸா நிறுவனத்தின் விசேட பயிற்சிப் பட்டறை!



(யாழ்ப்பாணம்)

ஜப்பான் யமஹா நிறுவனமும், கொழும்பு விநியோகஸ்தர்களும் இணைந்து கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள யமஹா பிளாஸா நிறுவனத்தில் இலவச சேவிஸ் பட்டறை மற்றும், மோட்டார் சைக்கிளை பாதுகாப்பாகவும், சௌகரியமாகவும் பாவிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறையொன்றை நேற்று ஆரம்பித்துள்ளது. இந்தப் பயிற்சிப் பட்டறை தொடர்ந்து மூன்று நாட்கள் வரை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஜப்பானிலிருந்து விசேடமாக யாழ்ப்பாணம் வந்துள்ள கே. இவா ஓ மற்றும் கொழும்பிலிருந்து வந்த பல தொழில்நுட்பவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

## பரிசளிப்பு விழா

யாழ். சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வில் சித்தியடைந்தோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு- நாளை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆசிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் சரஸ்வதி ஜெயராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

# வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களுக்கு சமுர்த்தி திட்டங்கள் கைகொடுக்கின்றன

## அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி என்னும் சொல்லின் அர்த்தம் 'சுபீட்சம்' என்பதாகும். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்கள் அனைவரும் மற்றவர்களைப்போல சுபீட்சமான வாழ்வை வாழவேண்டும் என்ற நல்நோக்கத்துடனேயே இந்த சமுர்த்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் புதிய கட்டடத்தை கடந்த புதன்கிழமையன்று திறந்துவைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தென்பகுதியில் மிகவும் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. யாழ். மாவட்ட சூழ்நிலைகள் காரணமாக இதனை இந்த மாவட்டத்தில் வெற்றிகரமாகச் செயற்படுத்துவதில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும். வறுமைக் கோட்டின்கீழ் வாழும் மக்கள் அனைவரும் இந்த சமுர்த்தித் திட்டத்தில் இணைந்துகொள்ளவேண்டும். கிராமம் வளர்ச்சியடையும்போது, இந்த மாவட்டமும் வளர்ச்சியடையும்.

அவர் மேலும் தனது உரையில்-

1200 ரூபா நிவாரணத்தை நம்பி, தமது சொந்தக்காலில் நிற்க மக்கள் மறந்துவிடுகிறார்கள். இவர்கள் நிவாரணம் வேண்டாம் - எமது சொந்தக் காலிலே நிற்போம் என நினைத்து தமது செயற்பாடுகளை ஏன் மாற்றக் கூடாது.

அவர்களாக அதனைச் செய்யாவிடினும், இப்படியான சமுர்த்தி வங்கியின் திட்டங்கள் மூலம் அவர்களையும் வறுமைக்கோட்டுக்கு அப்பால் கொண்டுவரவேண்டிய செயற்திட்டங்களை சமுர்த்தி நடைமுறைப் படுத்தி வருகிறது.

சாதாரண மக்களின் இன்பத்திலும், துன்பத்திலும் நாங்கள் பங்கு கொள்கிறோம். ஏன் மரணம், திருமணம், குழந்தை பிறப்பு போன்றவற்றுக்கு சமுர்த்தி வங்கி மூலம் சலுகைகளைப் பெறுவதற்குத் துணையாக சமுர்த்தித் திட்டங்கள் கைகொடுக்கின்றன.

மக்களுக்கு நம்பிக்கை ஊட்டப்படவேண்டும். மக்கள் அபிவிருத்தியில் பங்கெடுக்கவேண்டும். மக்களின் ஒவ்வொரு செயற்பாடும் நன்றாக அமையவேண்டும்.

நாம் பிறந்த நாட்டுக்கு என்ன செய்தோம்? எமது பங்களிப்பு என்ன? என்று ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்துச் செயற்பட்டால் நாமும் மற்றைய மாவட்ட மக்களைப்போல் உயர்வடையலாம். நீண்டகால அபிவிருத்திக்கு நிவாரணம் நல்லதல்ல. வவுனியா மாவட்டத்தில் இந்த சமுர்த்தித் திட்டம் சகல அம்சங்களையும் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தி வருவதால், அங்கு வாழும் மக்கள் இதன்மூலம் பல நன்மைகளைப் பெற்று வருகின்றனர்.

அதேபோல் இந்த மாவட்டத்திலும் ஒவ்வொருவரின் செயற்பாடும், சமுர்த்தி அலுவலர் முதல் அரச உயர் அதிகாரிகளும் ஒன்றிணைந்து இந்தத் திட்டங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினால் ஏனைய மாவட்டங்களைவிட இந்த சமுர்த்தி மூலம் கூடிய பயன்களைப் நாம் அடையலாம் எனக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார் தனது உரையில் -

யாழ்.மாவட்டத்தில் 14,946 சமுர்த்தி சிறு குழுக்களில் ஏறத்தாழ 70 ஆயிரம் குடும்பங்கள் தமது பங்களிப்பைச் செய்து வருகின்றன. 31 சமுர்த்தி சங்கங்கள் மூலம் சிறு சிறு தொகையாகச் சேர்க்கப்பட்ட 73 மில்லியன் ரூபா சேமிப்பில் உள்ளது. 43 சமுர்த்தி முகாமையாளர்களும் 568 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கடமையாற்றி வருகிறார்கள். இவர்கள் மூலம் சேர்க்கப்பட்ட மக்களின் காசு, மக்களே பெற்று- அதன்மூலம் சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு தமது வாழ்வின் முன்னேற்றத்தைப் பெறவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் திருமதி த.பாபு, நிர்வாக அலுவலர் மு.சிவராசா, அராலி மத்தி கிராம உத்தியோகத்தர் சி.க.பாலசிங்கம், உட்பட பலர் உரையாற்றினர். (48)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நிவாரணம் குறித்து அரச அதிபருடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்கள் தமக்கான நிவாரண வழங்கல் சம்பந்தமாக கடந்தவாரம் யாழ்.அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலின்போது மேற்படி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குதல் சம்பந்தமாக அரச அதிபர் விளக்கமளித்தார்.

## மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி

(சங்கானை)

சங்கானைச் சந்தையில் ஒரு கிலோ கத்தரிக்காய் 10 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதால், விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர்.

ஏனைய மரக்கறிகளும் - கோவா 10 ரூபாவுக்கும், வெங்காயம் 20 - 30 ரூபா வரையும் குறைந்த விலையில் இங்கு கிடைக்கிறது. முன்னைய காலங்களை விட, தற்போது மிகவும் குறைவான விலையில் இந்த மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. (48)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வளர்மதி சனசமூக நிலையம் நடத்தும் - 'காணி விவகாரமும் அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளை இனங்கண்டு தீர்வை நோக்கிய பார்வை' தொடர் 02 நிகழ்வு - நாளை மாலை 4 மணிக்கு வளர்மதி முன்பள்ளி மண்டபத்தில் இ.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், கிராமிய உழைப்பாளர் சங்க பிரதிநிதிகளும், பிரதேச பொதுசன பிரதிநிதிகளும், சமூக ஆர்வலர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நல்லூரில் கண்டனப் பேரணி

யாழ்ப்பாணம் - நல்லூர் கோட்டத்தில் உள்ள அனைத்து பொது அமைப்புக்களும் இணைந்து எதிர்வரும் 6 ஆம் திகதி மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தவுள் ளன.

கிழக்கில் பொதுமக்கள் தாக்கப்படுவதையும், படுகொலை செய்யப்படுவதையும், போராளிகள் தாக்கப்படுவதையும் கண்டித்தும் - இடம்பெயர்ந்துள்ள மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தும் பொது அமைப்பு பிரதிநிதிகள் நல்லூர் கோவில் பின் வீதியில் ஒன்றுகூடி பேரணியை நடத்தவுள்ளன.

இந்தப் பேரணி யாழ். போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு சென்று பொது அமைப்பு பிரதிநிதிகளால் மகஜர் ஒன்று கையளிக்கவுள்ளது என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# சமூகக்கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்கான கற்பித்தல் சாதன கண்காட்சி - போட்டி!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7 - 11 வரையான வகுப்புகளில் சமூகக்கல்வியும், வரலாறும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் சாதனக் கண்காட்சியும், போட்டியும் மே மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்களின் பெயர்களையும், அவர்களின் கற்பித்தல் சாதனங்களின் விபரங்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்பப்படிவங்களைத் தயார் செய்து, எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு நல்லூர் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தயார்செய்யப்படும் ஆக்கங்கள், கற்பித்தல் உபகரணங்கள் - நவீன கற்பித்தல் உத்திகளை வெளிப்படுத்துவனவாகவும், தொழில்நுட்ப முறையைக் கொண்டதாகவும், பாட அலகுக்கு பொருத்தமானதாகவும், மாணவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவும், சுயமாகக் கற்றலுக்கு ஏற்ற வகையிலும், நீண்டகாலப் பாவனையுடதாகவும் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# சங்கானைப் பகுதியில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

கடந்த சில நாட்களுக்குள் எட்டுக்கு மேற்பட்ட சைக்கிள்கள் சங்கானைப் பகுதியில் திருட்டுப்போயுள்ளன. சங்கானை பிரதேச செயலகத்தில் அண் மையில் கிராம அலுவலர் ஒருவரின் சைக்கிள் உட்பட, மீன் சந்தை, மக்கள் வங்கி, மரக்கறிச் சந்தைகளில் விடப்பட்ட, பூட்டப்பட்ட நிலையிலிருந்த சைக்கிள்கள் இனந்தெரியாதோரால் களவாடப்பட்டுள்ளன.

இதுபற்றி சங்கானை பொலிஸாரிடம் சைக்கிள் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து - பொலிஸாரும் பல வழிகளில் இந்தச் சைக்கிள் திருடர்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுத்தபோதும் தொடரும் சைக்கிள் திருட்டைத் தடுக்கமுடியாதுள்ளது. (48)

# கிளிநொச்சி - ஆரோக்கியபுரத்தில் தாய் - சேய் நிலையம் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஆரோக்கியபுரத்தில் நோர்வே தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் நிறுவப்பட்ட "அன்பு" தாய் - சேய் போசாக்கு நிலைய புதிய கட்டடமும், சிறுவர் பூங்காவும் கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சபாரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தாய் - சேய் போசாக்கு நிலைய பிரதான கட்டடத்தை அவுஸ்ரேலிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த பரராஜசிங்கம் சிராணி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். "அன்பு" தாய்-சேய் போசாக்கு நிலையத்தின் முன்றலில் யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக துணைப்பணிப்பாளர் ரீகன் கருத்துரை வழங்குகையில் - இந்த தாய் - சேய் நிலையம் 2001 ஆம் ஆண்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாகவும், பொருளாதாரத் தடைகள் காரணமாகவும் பாதிக்கப்பட்ட கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகளுக்காக அமைக்கப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட 87 சிறுவர், சிறுமியரை வளர்க்கும் பாரிய பொறுப்போடு புதுக்குடியிருப்பில் முதலாவது தாய் - சேய் போசாக்கு நிலையத்தையும், இரண்டாவதாக இந்த நிலையத்தையும் அமைத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - இன்று இதுபோன்ற போசாக்கு மையங்கள், பூங்காக்கள் என்பன நிறுவப்பட்டு, ஒரு ஆரோக்கியமான எதிர்காலச் சமுதாயத்தை எங்களால் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை நம் எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் பெண்கள் 9 பேருக்கு சுய கைத்தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் ஊக்குவிப்புக் கடனுதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**ஏப்ரல் -02**

1877 : லண்டன் வெஸ்ட் மினிஸ்டரில் நடந்த சேர்க்கஸ் நிகழ்வு ஒன்றில் பீரங்கி ஒன்றிலிருந்து குண்டுக்குப் பதிலாக ஒரு பெண் 60 அடி தூரத்துக்கு வீசி எறியப்பட்டார். இந்த நிகழ்வு இரு வருடங்களாக தொடர்ந்தும் நடத்தப்பட்டது.

1899 : சாலைப் போக்குவரத்தில் முதல் சாதனை படைக்கப்பட்டது. பெல்ஜியத்தைச் சேர்ந்த கேமில் ஜெனாட்சி என்பவர் மணிக்கு 106 கி.மீ வேகத்தில் காரை ஓட்டிச்சென்று வீதிப் போக்குவரத்தில் சாதனை படைத்தார்.

1941 : ஜேர்மனியுடன் ஒத்துழைக்க விரும்பாமல் ஹங்கேரி பிரதமர் கவுண்ட் டெலிக்கி தற்கொலை செய்துகொண்டார்.

1963 : ரஷ்யா சந்திரனை நோக்கி லூனா – 4 என்ற விண்கலத்தை அனுப்பியது.

1974 : எட்டு மணி நேரத்துக்கு, மணிக்கு–480 கி.மீ வேகத்தில் வீசிய சூறாவளி காற்றினால் அமெரிக்காவின் அலபமாவிலிருந்து வின்ட்சர் பகுதிவரை பாரிய சேதங்களும், உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

1979 : கேமர்ரூஜ் படுகொலை பற்றிய விபரங்களை – ஆதாரங்களை வியட்நாம் வெளியிட்டது.

1982 : போக்லண்ட் தீவை ஆர்ஜென்ரீனா கைப்பற்றிக்கொண்டது.

1994 : காஸா மற்றும் ஜெரிக்கோவில் பலஸ்தீன பொலிஸ் பணி புரிய இஸ்ரேல் அனுமதி வழங்கியது.

தொகுப்பு - சந்துரு

## முக்கிய கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள கூட்டுறவு சங்கம் மற்றும் கடற்தொழில் சங்கங்களின் சமாசம், சிக்கன கடன் உதவி வழங்கும் சமாசம், கூட்டுறவு சபை, கூட்டுறவு ஒன்றியம், பனை தென்னை வள அபிவிருத்தி இணையம் ஆகியவற்றின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கான முக்கிய கலந்துரையாடல் - நேற்றுக் காலை 10 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்திருக்கும் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பணிமனையில், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு ஆணையாளர் தி.மு.சிவமயம் தலைமையில் இடம்பெற்றது.

## நினைவுநாள் நிகழ்வு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணியில் சுனாமி கடற்கொந்தளிப்பால் உயிரிழந்த ஆசிரியர்கள், மாணவர்களது நினைவு நாள் நிகழ்வு, கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மருதங்கேணி வித்தியாலயத்தில் அதிபர் நவநீதமணி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த தாயகன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

# நாட்டுபற்றாளர் மணியம்மாவின் வீரவணக்க நிகழ்வு முல்லைத்தீவில்

(கிளிநொச்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக உயிரிழந்த முல்லைத்தீவு - மணல்குடியிருப்பைச் சேர்ந்த நாட்டுப்பற்றாளர் மணியம்மா (ஆசைப்பிள்ளை - மார்க்கம்மா)வின் வீரவணக்க நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்ற்றது.

இந்த நிகழ்வு அன்னையர் முன்னணி உறுப்பினர் சகிலா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை கடற்புலிகளின் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன், அன்னையர்முன்னணி செயலாளர் தயாழினி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை அவரது சகோதரி ஆரோக்கியம்மா ஏற்றிவைத்தார். மலர் மாலையை முன்னாள் அன்னையர் முன்னணி பொறுப்பாளர் புலியக்கா அணிவித்தார். நாட்டுப்பற்றாளர் மணியம்மாவின் மகனான மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் ராஜ்குமாரின் திருவுருவப்படத்துக்கான மலர்மாலையை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ஈழவன் அணிவித்தார்.

தலைமையுரையைத் தொடர்ந்து, நினைவுரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ரங்கன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் மற்றும் ஞானாம்பிகை, பத்மாவதி கனகரத்தினம், விக்ரர் அம்மா, அன்ரனி ஜெயநாதன், மரியராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

# முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் மாபெரும் கண்டனப் பேரணி!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர், வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் என்பன இணைந்து இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் பேச்சுகளை உடன் ஆரம்பிக்கவேண்டும்.

சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்ப சர்வதேசம் வழங்குகின்ற நிதியை எமது பகுதிகளுக்கு உரிய முறையில் அனுப்பிவைக்கவேண்டும், படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இப்பேரணி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெறவுள்ள இந்தப் பேரணியானது புதுக்குடியிருப்பு - மந்துவில் வீதியில் இருந்தும், உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக இருந்தும், முல்லைத்தீவு வீதியில் இருந்தும், புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியில் இருந்தும், புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் இருந்தும் புதுக்குடியிருப்பு சந்தியை வந்தடைந்து, அங்கு கண்டனக் கூட்டமும் இடம்பெறவுள்ளதுடன், இது தொடர்பான மனுக்களை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் அரச தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

## குளிரூட்டி லொறிகள் அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சமாசத்துக்கு யு.என்.டி.பி நிறுவனம் மூன்று குளிரூட்டி லொறிகளை வழங்கியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாவட்ட கடற்தொழிலாளர்சங்க சமாசத்தில் முகாமையாளர் சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் - யு.என்.டி.பி பிரதிநிதி மூன்று லொறிகளையும் சமாசத் தலைவர் மரியராசாவிடம் கையளித்தார். இந்த நிகழ்வில் யு.என்.டி.பி பிரதிநிதிகள், சமாசப் பிதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தென்னைச் செய்கை அபிவிருத்தி; அரசின் உதவி கிடைக்கவில்லை!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் உதவிகள் எதனையும் செய்யவில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மாத்திரம் சுமார் 25 ஆயிரம் தென்னை மரங்கள் போர்க் காலத்தில் அழிக்கப்பட்டுள்ளன. எனினும் இதற்காக மீள் நடுகைகள் எதுவும் மேற்கொள்ளப் படவில்லை.

இதேவேளை, அரசாங்கமும் இதற்கு உதவிகள் எதனையும் செய்யவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 'எல்லை காக்கும் இல்லங்கள்' நூல் வெளியீட்டு விழா!

கப்டன் வானதி வெளியீட்டகத்தால் போராளி எழுத்தாளர் தமிழவளின் 'எல்லை காக்கும் இல்லங்கள்' நூல் வெளியீட்டுவிழா இடம்பெறவுள்ளது.

இந்த நூல் நாளை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. இந்த நூலுக்கான நம்பிக்கை உரைகளை எழுத்தாளர் அறிவுமதி, கலை பண்பாட்டுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச. பொட்டு, மாலதி படை யணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, மாவீரர் போராளி குடும்ப நலன்காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

எல்லைப்படை மாவீரர்களின் குடும்ப வரலாறுகளை யும், அவர்கள் வரித்துக்கொண்ட இலட்சியத்தையும் சுமந்துகொண்டு இந்த நூல் வெளி வருகிறது.

## துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பணியாளர்கள், சமாசத்தின் அபிவிருத்திப்பகுதி பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

மருதங்கேணி செயலணிக்குழு அலுவலகத்தில் வைத்து கொழும்பு பாலம் நிறுவனத்தால் வழங்கப்பட்ட 30 துவிச்சக்கர வண்டிகளில் 25 வண்டிகள் இரு நிறுவனங்களின் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டன. (21)

## சந்திப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைக்கான சந்திப்பு - கடந்த புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், சமாதான காலத்தில் போராளிகள், பொதுமக்கள் எதிர்கொள்ளும் இராணுவ கெடுபிடிகள் தொடர்பாகவும், தற்போது போராளிகளுக்கு ஏற்பட்ட தாக்குதல்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

# அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியின் மாதாந்த கலந்துரையாடல் - கடந்த புதன்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் மாவட்ட அன்னையர் முன்னணி உபதலைவி பராசக்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கருத்துரைகளை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் வேழினி, பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் மதனி, மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் வழங்கினர்.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பெண்கள் மட்ட அமைப்புகள் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## சோதனை நிலையம் முன்னகர்த்தப்படுவதாக குற்றச்சாட்டு

வவுனியா-மன்னார் வீதியில் உயிலங்குளம் தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச்சாவடி முன்னகர்த்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பாக படைத்தரப்பு போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழுவிடம் முறையிட்டுள்ளது. முன்னர் படையினரின் சோதனைச் சாவடியில் இருந்து பார்க்கும்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியை நேரடியாகப் பார்க்கமுடியாத நிலை காணப்பட்டது. எனினும் தற்சமயம் அதனை நேரடியாக பார்க்கக்கூடியதாக இருப்பதாக படைத்தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.